விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 02 புதன்கிழமை (17.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

SATS-TECH ENGINEERS

NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# கிளாலியில் 7 மணிநேரம் உக்கிர சமர்

# 40 படையினர் பலி என்கின்றனர் புலிகள்

## 25 படையினர் பலி – இராணுவம்

(கிளிநொச்சி)

கிளாலி களமுனையில் படையினரின் கொமாண்டோக்கள் மேற்கொண்ட முன் நகர்வு 7 மணிநேர தாக்குதல் மூலம் முறியடிக்கப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதலில் 40 படையினர் உயிரிழந்ததாகவும், 100க்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை 25 படையினர் உயிரிழந்ததாகவும், 10பேரைக் காணவில்லை என்றும் படைத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமது தரப்பு இழப்புக்கள் குறித்து விடுதலைப் புலிகள் தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை. (12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் வாகன விபத்து நால்வர் பலி;23பேர் படுகாயம்

(கொழும்பு)

தலைநகர் கொழும்பின் பிரதான பகுதியான பாணந்துறை வாதுவயில் நிகழ்ந்த வாகன விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 23 பேர் காயமடைந்துள்ளனர்.

வாதுவ-காலி வீதியில் நேற்று காலை 10.30 மணியளவில் இந்தப் பாரிய விபத்து நிகழ்ந்தது. எதிர் எதிராக வந்து கொண்டிருந்த மூன்று பயணிகள் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதியதனால் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸ் துறையின் ஊடகப் பேச்சாளர் றஞ்சித் குணசேகரா தெரிவித்தார்.

இவ்விபத்தில் குளிரூட்டி சொகுசு பேருந்து ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளது. இவ் விபத்து சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் விபரம் தெரியவரவில்லை. (ச-5)

## கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு எதிரான வழக்கு மே மாதத்துக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத்துறையினரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை 2009ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மாவட்ட நீதிபதி மே மாதம் ஆறாம் திகதி வரை ஒத்திவைத்துள்ளார்.

ஜேர்மன் பேர்லின் நகரில் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் தமிழீழத்திற்கு ஆதரவாக பேசினர் என குற்றஞ்சாட்டி குற்றப்புலனாய்வுத்துறை பொலிஸார் (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனை கைது செய்ய எவராலும் முடியாது!



### பிரபாவின் சகோதரி தெரிவிப்பு

(றொரண்டோ)

எனது சகோதரரை வெகு சீக்கிரம் கொல்லப்போவதாக இலங்கை இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். அவர் பாதுகாப்பாகவேயுள்ளார்.

அவரை இலங்கை இராணுவத்தினரால் கைது செய்ய முடியாது என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சகோதரி திருமதி விநோதினி ராஜேந்திரன் (12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி மீண்டும் வலியுறுத்தல்

(சென்னை)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தத்தை உறுதிப்படுத்தம் வகையில் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை உடனடியாக இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என தமிழக ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று மீண்டும் மத்திய (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. நோக்கி 4 முனைகளில் தாக்குதல் 100 படையினர் பலி; 250 பேர் படுகாயம்

### விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நோக்கிய நான்கு முனைகளிலான படையினரின் முன் நகர்வு தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 100க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 250க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குஞ்சுப்பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கியும் முறிகண்டியில் இருந்து இரணைமடு நோக்கியும் புலிக்குளத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கியும் மலையாளபுரத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கியுமாக நான்கு முனைகளில் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான உணவு விநியோகம் முற்றாகத் தடைப்படும் அபாயம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவை நோக்கி இலங்கை இராணுவத்தினர் அண்மையில் ஆரம்பித்திருக்கும் மும்முனை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வன்னிக்கு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்ட ஒரேயொரு பாதையும் தடைப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் வீதியில் இரு தரப்புக்களுக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெறுவதால் (12ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நோய் பரவும் அபாயம் சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு காய்ச்சல் மீண்டும் பரவும் அபாயம் தோன்றியிருப்பதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு மேலும் குறிப்பிடுகையில், நாட்டில் அடிக்கடி கடும் மழை பெய்து வருவதால் நுளம்புகள் பெருகி வருகின்றன. இந்த நுளம்புகளை அழிப்பதற்கான (12ஆம் பக்கம் பார்க்க)

சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண...

உங்களது பிரதேசங்களில் சுகாதாரப் பிரச்சினைகள் காணப்பட்டால்...
- உங்களது பகுதி பொது சுகாதார பரிசோதகருடன் அல்லது குடும்பநல உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுங்கள்.
- அல்லது உங்களது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி இலக்கங்கள்

| இல | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 021 222 2645 |
| 02 | கோப்பாய் | 060 221 3615 |
| 03 | தெல்லிப்பழை | 060 221 3620 |
| 04 | மானிப்பாய் | 060 221 3614 |
| 05 | பருத்தித்துறை | 021 222 4482 |
| 06 | சாவகச்சேரி | 060 221 3621 |
| 07 | ஊர்காவற்றுறை | 060 221 3588 |

- அங்கும் தீர்வு காணப்படாவிடின் யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி இலக்கங்கள்
-021 222 2278
-021 222 3725

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை CARE International

(C-1814)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னேறும் இலங்கை இராணுவத்தை மீளத் திரும்புவதற்கு விடுவதில்லை

## தமிழ் மக்களின் வைராக்கியம் என்கிறார் பா.நடேசன்

வன்னிப் பெருநிலப்பரப்பில் முன்னேறும் இராணுவத்தினரை மீள திரும்ப விடுவதில்லை என்ற வைராக்கியத்துடனே தமிழீழ மக்கள் போராடி வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ தாயகத்தின் தற்போதைய களநிலைமைகள் மற்றும் அங்குள்ள மக்கள் படும் இன்னல்கள் தொடர்பாக அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி அலைகள் நிகழ்ச்சிக்கு கடந்த 9ஆம் திகதி பா.நடேசன் அளித்த நேர்காணலின் முக்கிய பகுதி வருமாறு;

**தாயக நிலைமையும் மக்கள் அவலமும்**

**தாயக மக்கள்படும், அனுபவிக்கும் இன்னல்கள் குறிப்பாக தற்போதைய வெள்ள அனர்த்தத்தினால் அவர்கள் அனுபவிக்கும் அவலங்கள் குறித்தும் அவர்களுடைய தற்போதைய நிலைமைகள் குறித்தும் கூறமுடியுமா?**

எங்களுடைய மக்கள் தொடர்ச்சி யான இராணுவ நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் மன்னாரிலிருந்து தொடர்ச்சியாக மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். சாதாரண மக்களாக அல்லாமல் எங்களுடைய போராட்டத்தின் பங்காளிகளாகவும் உள்ளனர்.

இலங்கை அரசினுடைய வான்குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள், மோசமான பொருளாதாரத் தடைகள், மருந்துத் தடைகள், அத்தியாவசிய உணவுத் தடைகள் போன்ற மிகவும் மோசமான இந்த சூழலில்- எமது மக்களை இயற்கை அனர்த்தமும் பெரிதளவில் பாதித்திருக்கிறது.

அரசு பாரியதொரு பொருளாதாரத் தடையை எங்கள் மக்கள் மீது மேற்கொண்டு வருகிறது. கடந்த ஒக்ரோபர் மாதம் 400 பாரவூர்திகள் அடங்கிய பொருட்கள் வன்னிப் பெரு நிலப்பரப்பிற்கு வந்திருக்க வேண்டும். ஆனால், 218 பாரவூர்திகளையே இலங்கை அரசு வன்னிக்கு அனுப்பியுள்ளது.

அதேபோல் கடந்த நவம்பர் மாதமும் 400 பாரவூர்திகள் வன்னிப்பெரு நிலப்பரப்பிற்கு வரவேண்டும். ஆனால் 112 பாரவூர்திகளுக்கு அவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்த புள்ளி விபரங்களை பார்த்தால் எங்களுடைய மக்களை பொருளாதாரத் தடையும் இயற்கை அனர்த்தமும் எந்தளவுக்கு பாதித்திருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

**மக்களின் வைராக்கியம்**

எனினும் எங்களுடைய மக்களுக்கு கடந்த காலத்தில் ஏற்பட்ட போராட்ட அனுபவங்கள்- அவர்களின் நெஞ்சுரம்-போராட்ட வைராக்கியம் என்பன இத்தகைய சவால்களை கண்டு குறைந்து போகவில்லை. மாறாக ஆச்சரியப்படத்தக்க வகையில் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இராணுவத்தை முன்னேற விடக்கூடாது, வந்தவர்களை மீளவும் அவர்களுடைய இடங்களுக்கு திரும்பிச்செல்ல விடக்கூடாது என்ற வைராக்கியத்துடன் எல்லைப் படைகளாக-சிறப்பு எல்லைப் படைகளாக-பின் களமுனைகளில் பணி செய்கின்றவர்களாக- எங்களுடைய போராட்டத்தின் பங்காளிகளாக -போர் வீரர்களாக உருவாகி வருவதை எங்களால் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

மக்கள் எழுச்சி, மக்கள்போராட்டம், இராணுவத்திற்கு எதிரான அடக்குமுறை அரசிற்கு எதிரான மக்கள் கிளர்ச்சி என்று வரலாற்று புத்தகங்களில் படித்திருக்கலாம். ஆனால் அதை நாங்கள் நேரடியாக பார்க்கும்போது அந்த மக்களுக்கான விடுதலையை விரைவாக வென்று கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம்- எழுச்சி- எங்களை இன்னமும் பல மடங்கு வேகமாகச் செயற்பட வைத்திருக்கிறது.

**வன்னிக் கள நிலைமை**

**வன்னிப்பெரு நிலப்பரப்பில் தற்போதுள்ள களநிலமைகள் எந்த அளவில் உள்ளன?**

இராணுவம் பல முனைகளில் எங்களுடைய பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டு வந்தாலும்-எங்களுடைய போர் வீரர்கள் சகல முனைகளிலும் கடுமையான எதிர்ச் சமர்களைப் புரிந்து சிங்கள இராணு வத்திற்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்திய வண்ணமிருக்கின்றனர். இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு-இந்த அரசாங்கத்தில் முன்னர் இருந்த மங்கள சமரவீர ஒரு இணையத் தளத்தை உருவாக்கியிருக்கிறார்.

இராணுவத்திற்கு ஏற்பட்டு வருகின்ற இழப்புக்கள், இராணுவத்தினுடைய மன நிலை -மனச்சோர்வு தொடர்பாக புள்ளி விபரங்களுடன் அவர் கொடுத்த வண்ணமி ருக்கிறார்.

உண்மையில் இராணுவத்தினர் பலத்த இழ்ப்புகளை எதிர்நோக்கி மிகவும் பலவீனமான நிலையிலேயே சிறிதுசிறிதாக நகர்ந்து கொண்டிருக்கின்றனர். கால நேரம் வரும் போது எங்களுடைய மக்களின் பலத்துடன் ஒரு பாரிய வெற்றியை-வரலாற்றில் என்றுமே சாதிக்காதளவு ஒரு பாரிய வெற்றியை- நிச்சயமாக அடைவோம் என்ற நம்பிக்கை எங்களுடைய தலைவர், தளபதிகள், போர்வீரர் கள் மற்றும் எங்களுடைய மக்கள் என அனைவருக்கும் உள்ளது என்பதை இந்த நேரத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

**இலங்கை படையினர் தற்போது பாரிய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை அவர்களுடைய பலமாகக் கருதலாமா?**

இத்தகைய நிலை இராணுவ ரீதியாக அவர்களுக்கு மிகவும் பலவீனமான நிலையை ஏற்படுத்தும் என்பதுதான் அனைவரதும் எதிர்பார்ப்பு இராணுவ ஆய்வாளர்களும் அதையே கூறி வருகின்றனர். களமுனையில் தற்போது ஏற்பட்டு வரும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது இராணுவத்தினர் மிக விரைவாக பலவீனமான நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர் என்பதையே காட்டுகிறது.

**கிளிநொச்சி தற்போது ஒரு சூனியப் பிரதேசமாகி விட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகிக்கொண்டிருக் கின்றன. இதில் எந்தளவுக்கு உண்மை உள்ளது?**

கிளிநொச்சியை சுற்றியுள்ள பகுதிகளில் தற்போதும் மக்கள் வசிக்கின்றனர். அங்கு அவர்கள் வயல் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இலங்கை வான்படையின் குண்டுகளும் எறிகணைகளும் பீரங்கிகளும் இவ்வாறான குடிமனைகளையும் வயல் நிலங்களையும் நோக்கியே ஏவப்படுகின்றன. இருப்பினும் இத்தகைய தாக்குதல்களுக்கு இயைபாக்கம் அடைந்து-பழகிப்போய்- மக்கள் தொடர்ந்தும் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் சில இடங்களில் இருந்து தந்திரோபாய பின் நகர்வை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்ற போதும்-புலிகள் பலமிழந்து விட்டனர் என்று சில இராணுவ ஆய்வாளர்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். இதற்கு உங்களது பதில் என்ன?**

இவ்வாறான ஆய்வாளர்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். நாம் எவ்வாறான தந்திரோபாய நகர்வுகளை பின்பற்றி வருகிறோம் என்பதை அவர்கள் பின்னர் அறிவர். தந்திரோபாயங்களை முன்னரே அறிவிப்பது விவேகமான செயற்பாடாக இருக்குமென நான் நினைக்கவில்லை.

**தற்போதைய இராணுவ நடவடிக்கை மூலம் இலங்கை அரசாங்கம் எதனை எட்ட விரும்புகிறது?**

தமிழ் மக்களின் பலமாக இருக்கும் எங்களை அழித்து முற்று முழுதான ஒரு இன அழிப்பை மேற்கொள்ளலாம் என்று இலங்கை அரசு திட்ட மிடுக்கிறது. ஏனெனில் இங்கு படையெடுப்பை நடத்திக்கொண்டு இருக்க-இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்கள் கடத்தப்பட்டு காணாமல் போய்க்கொண்டிருக்கின்றனர்; படுகொலை செய்யப்படுகின்றனர். குறிப்பாக கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்படுவதும் தமிழ் இளைஞர்கள் காணாமல் போவதும் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இலங்கை அரசாங்கத்தின் இன அழிப்பின் ஒரு பகுதியாகத்தான் இதனைப் பார்க்க வேண்டும். இலங்கை ஆட்சியாளர்கள் எங்களுடைய இனத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தொடுதான் இன்று நேற்றல்ல கடந்த 50 வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றனர்.

**தென்பகுதியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் இராணுவ ரீதியில் இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டமுடியுமென்ற நம்பிக்கையை சிங்கள மக்கள் வெளியிட்டுள்ளனர். இது எதனைக் காட்டுகிறது?**

தமிழ் மக்களின் இன அழிப்பைக் கணக்காகக் கொண்டு சிங்கள மக்கள் பிழை யான பாதையில் செல்கின்றனர் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

**கிழக்கில் இன்னமும் போராளிகள் உள்ளனர்**

**கிழக்கு விடுவிக்கப்பட்டு அங்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் அதற்கு உதவுமாறும் கோரிக்கைகள் விடுவிக்கப்பட்ட பின்னணியில் தற்போது அங்கு தாக்குதல்கள் அதிகரித்துள்ளதுடன் ஆட்கள் கடத்தப்படுவதும் காணாமல் போவதும் என பயங்கர நிலை ஒன்று அங்கு உருவாகியிருக்கிறது. இது எதனை வெளிப்படுத்துகிறது?**

கிழக்கில் இன்னமும் எங்களுடைய போராளிகள் இருக்கின்றனர். அங்கு இருக்கின்ற மக்கள் முற்று முழுதாக எங்களையே ஆதரிக்கின்றனர். எங்களுடைய வரவை அந்த மக்கள் எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றனர். கிழக்கிலுள்ள மக்கள் அங்குள்ள இலங்கை அரசாங்கத்தின் நிர்வாகத்தையும் ஒட்டுக் குழுக்களையும் முற்று முழுதாக நிரா கரித்த வண்ணமே இருக்கின்றனர். இதனை இலங்கை அரசாங்கத்தினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால்தான் அங்குள்ள எமது ஆதரவாளர்களையும் எங்களுடைய மக்களையும் கடத்துவதும் கொலை செய்வதுமான செயற்பாடுகளில் இலங்கை அரச படைகள் செயற்பட்டு வருகின்றன.

**தமிழ் மக்கள் இந்தியாவிடம் எதனை எதிர்பார்க்கிறார்கள்?**

தமிழ் மக்கள் தமது விடுதலை இயக்கத்

(11ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்க பதவி வெற்றிடம் விண்ணப்பம் கோரல்

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதியின் கீழ் இயங்கும் தெல்லிப்பளையில் அமைந்துள்ள பாதுகாப்பு தங்குமிட மற்றும் புனர்வாழ்வு நிலையத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. இவ் வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்படவுள்ளது.

**1. புனர்வாழ்வு நிலையத்திற்கான நலன்புரி எழுதுநர்**

| | | |
|---|---|---|
| 1.வயது | - | 24-35 உட்பட்ட ஆண் அல்லது பெண் |
| 2.கல்வித்தகைமை | - | க.பொ.த உயர்தரப் பரீட்சை சித்தி |
| 3.தொழிற்தகைமை | - | கணனி மற்றும் தட்டச்சு |
| 4.மொழி தேர்ச்சி | - | தமிழ்,ஆங்கிலம் நன்கு கதைக்கவும் எழுதவும் தெரிந்திருப்பதோடு சிங்கள மொழி அறிவும் அவசியமாகும். |

5. விண்ணப்பதாரி திருமணம் ஆனவரோ, ஆகாதவராகவோ இருக்கலாம். இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

6.மாதாந்த சம்பளம் - ரூ. 20,000/=

**2. வாடகை அடிப்படையில் வாகனத்தையும் (எல்ப் வகையின் மூடப்பட்ட லொறி வண்டியொன்று அல்லது வான் வண்டி) அதற்குரிய சாரதியும் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம்.**

1. மாதமொன்றுக்கு 2000Km ஓட வேண்டுமென்பதுடன் ஒரு கிலோ மீற்றருக்கான விலை.
2. வாகனத்தின் உரிமையாளரினால் எரிபொருள் வழங்கப்படுதல் வேண்டும்.
3. வாகனத்தின் உரிமையாளர் சாரதியை வழங்குதல் வேண்டும்.
4. வாகனத்தின் பராமரிப்பு வேலைகள் முழுமையாகவே வாகனத்தின் உரிமையாளரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.
5. வாகனம் மற்றும் சாரதி 24 மணி நேரம் முழுவதிலும் ஓடத் தயார் நிலையில் நிலையத்திலேயே தங்கியிருக்க வேண்டும்.
6. சாரதியின் தங்குமிட வசதிகள் மற்றும் உணவுக்காக வாகனத்தின் வாடகையில் நாளொன்றுக்கு 100/= ரூபா குறைத்துக் கொள்ளப்படும்.

a. புனர்வாழ்வு நிலைய நலன்புரி நிலையத்திற்கு எழுதுநர் பதவிக்கு விண்ணப்பிப்போர் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களின் உண்மைப் படுத்தப்பட்ட பிரதிகள்

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
2. கிராம உத்தியோகத்தர் அத்தாட்சிப் பத்திரம்
3. கல்விச் சான்றிதழ்
4. தொழிற் தகைமைச் சான்றிதழ்
5. தேசிய அடையாள அட்டைப் பிரதி ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதிகளை திட்டப்பணிப்பாளர்,புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணத்திற்கு முகவரியிட்டு 30.12.2008ற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

b. வாகனம் சம்பந்தமாக விண்ணப்பிக்க விரும்புவோர் அது சம்பந்தமான சகல நிபந்தனைகளுக்கமைய ஒப்புக்கொண்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

**க.கணேஷ்**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்**
**யாழ்ப்பாணம்.**

(C-1855)

# இன்று ஒரு தகவல்

## செவிச் செல்வம்

"ஐயா! உங்கள் பேச்சை தொடர்ந்து தினமும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!" என்றார் ஒருவர்.

"தொடர்ந்து கேட்கிறீர்களே... உங்களுக்கு காதுவலிக்கவில்லையா?" என்று கேட்டேன்.

" பேசும் உங்களுக்கே வாய்வலிக்கவில்லை எனும் போது எனக்கு எப்படி காது வலிக்கும்?" என்றார்.

நமது உடம்பில் ஓர் அதிசயம் என்ன தெரியுமா?

அதிக நேரம் நடந்தால் கால் வலிக்கும். அதிக நேரம் வேலை செய்தால் கை வலிக்கும். உடம்பு வலிக்கும்.

அதிக நேரம் பார்த்துக் கொண்டிருந்தால் கண் வலிக்கும். அதிக நேரம் பேசிக்கொண்டிருந்தால் வாய் வலிக்கும்.

ஆனால் அதிக நேரம் கேட்டுக்கொண்டிருப்பதால் காது வலிப்பதில்லை.

அதனால் தான் நமது பெரியவர்கள் கேட்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

திருவள்ளுவர், தேவையில்லாமல் வார்த்தைகளை உபயோகப்படுத்தாமல் ஒரு திருக்குறளில் மொத்தமாக ஏழு வார்த்தைகளை மட்டுமே உபயோகப்படுத்தியுள்ளார்.

அப்படி ஏழுவார்த்தைகள் உள்ள ஒரு குறளிலும் ஒரே சொல்லை 5 தடவைகள் திரும்பத் திரும்ப பயன்படுத்தியிருக்கிறார். அப்படியானால் அதை எந்த அளவுக்கு வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

" செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

செவிச் செல்வமானது அவ்வளவு முக்கியமானது. கற்றலின் கேட்டல் நன்று. அதிகம் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் எவ்வளவு கேட்டாலும் காது வலிப்பதில்லை.

குறைவாகப் பேச வேண்டும். அதிகமாக கேட்க வேண்டும். இன்னொரு விடயம் – எதையாவது நாம் பார்க்க விரும்பவில்லை என்றால் உடனே கண்ணை மூடிக் கொள்ளலாம். பேச விருப்பமில்லை என்றால் வாயை மூடிக் கொள்ளலாம்.

எதையாவது முகர விருப்பமில்லை என்றால் மூச்சை அடக்கிக் கொள்ளலாம்.

ஆனால் காதுக்கு மூடி கிடையாது. கேட்க விருப்பமில்லை என்றால் அதை கையால் தான் மூட முடியும்.

யார் என்ன சொன்னாலும் அது நல்லதோ கெட்டதோ காதில் விழுந்து கொண்டேதான் இருக்கும். அறிவுதான் நல்ல விஷயங்களை எடுத்துக் கொண்டு கெட்ட விஷயங்களை விட்டவிடவேண்டும்.

நல்ல கருத்துக்கள் நம் காதில் நிறைய விழுந்து கொண்டே இருக்க வேண்டும். அதைக் கேட்டு நாம் நல்லபடியாக வாழ வேண்டும் என்பது தான் படைப்பின் விருப்பம்.

ஆன்மீகப்பாதையில் முன்னேறுவதற்கு முதலில் 'சிரவணம்' செய்ய வேண்டும் என்று ஆன்மீகவாதிகள் கூறுவர்.

அதாவது பெரியவர்கள் சொல்லும் நல்ல கருத்துக்களை கேட்க வேண்டும் என்பதுதான் அதன் பொருள்.

அதனால் யார் நல்ல கருத்துக்களைச் சொன்னாலும் அதை காது கொடுத்துக் கேளுங்கள்.

இவ்வளவு கருத்துக்களையும் ஒருவரிடம் சொன்னேன். அவரும் சரி என்று தலையாட்டிக் கொண்டிருந்தார். பின்பு "நீங்கள் சொல்வது சரிதான் சேர். அதனால் தான் உங்களுடைய இன்று ஒரு தகவல் கூட நாங்கள் விரும்புகிறோமோ இல்லையோ தினம் காதில் விழுந்து கொண்டே இருக்கிறது" என்றார்.

எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. 'அப்படியா?' என்றேன்.

" ஆனாலும் என்னைப் போல சிலர் தகவலைக் கேட்கும் போது காதுக்கு மூடியில்லையே" என்று கவலைப் படுவதில்லை. என்றார்.

'ஏன்?' என்று கேட்டேன்.

' காதை மூடுவதற்கு தானே வசதியில்லை... ரேடியோவை மூடுவதற்கு வசதி இருக்கிறதல்லவா! அதனால் தான் டக்கென்று அதை மூடிவிடுவோம்.' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை

## கணித பாட வினாத்தாள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சை கணித வினாத்தாள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகளை ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதே வேளை கணித பாட வினாத்தாள் குறித்து தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மாணவர்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை கணிதம்II பாட வினாப் பத்திரம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்து கல்வியமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் விடைத்தாள் திருத்தும் போது மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் அவை திருத்தப்படுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார். க.பொ.த. சாதாரண தரப் பரீட் சையின் கணிதம் II பாட புதிய பாட த்திட்ட வினாத்தாள் கடினமாக இருந்ததாக மாணவர்கள், பெற் றோர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பாக பரீட்சைத் திணைக்களமும் கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

ஏணைய வருடங்களைப் போலவே இந்தவருடம் கணித பாட விடைத்தாள்களுக்கு புள்ளி வழங்கும் நடவடிக்கை நிபுணத்தும் உள்ள குழு மூலம் மேற் கொள்ளப்படு மெனவும் ஆணையாளர் அறிவித்துள்ளார்.(5)

## பட்ஜெட்டில் அதிகரிக்கபட்ட கொடுப்பனவு ரூ.560 ஜனவரி முதல் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும்

### புதிய சுற்று நிருபம் அறிவிப்பு

(கொழும்பு)

2009 ஆம்ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு ஜனவரிஓய்வூதியத்துடன்சேர்த்துவழங்கப்படுமென ஓய்வூதிய திணைக்களப் பணிப்பாளர்நாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் சகல திணைக்களங்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் செயலாளருக்கும் விஷேட சுற்று மூலம் ஓய்வூதிய திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

புதிய வரவு செலவுத் திட்டத் தில் 560 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் ஜனவரி ஓய்வூதியத் தின் போது சேர்த்து வழங்கப்படும்

எதிர்வரும் ஜனவரியின் போது ஒவ்வொரு ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியம், ஏனைய கொடுப்பனவுகள் பற்றிய விபரங்களும் ஓய்வூதியக்காரர்களுக்கு பிரதேச செயலாளர்களினால் அனுப்பி வைக்கப்படும்.

2009 ஆம் ஆண்டில் ஏழு மாதங்கள் வியாழக்கிழமைகளிலும் ஐந்து மாதங்கள் புதன் கிழமைகளிலும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வங்கிகளில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அச் சுற்று நிருபத்தில் அறிவி க்கப்பட்டுள்ளது.

2009 ஆம் வருடத்தில் ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் பின் வருமாறு.

ஜனவரி 8ஆம் திகதி, பெப்ரவரி 12ஆம் திகதி ,மார்ச் 12ஆம் திகதி , ஏப்ரல் 8ஆம் திகதி ,மே 6 ஆம் திகதி , ஜூன் 11ஆம் திகதி,ஜூலை 9ஆம் திகதி ,ஆகஸ்ட் 12ஆம் திகதி , செப்டம்பர் 10 ஆம் திகதி ,ஒக்டோபர் 7 ஆம் திகதி , நவம்பர் 11 ஆம் திகதி , டிசம்பர் 10 ஆம் திகதி. (5)

## இராசி பலன்

17.12.2008
(மார்கழி 2, புதன்கிழமை)
ஆயிலியம் முற்பகல் 10.07மணிவரை
பஞ்சமி பிற்பகல்12.47மணிவரை
இராகுகாலம் 12.23- 1.53மணிவரை
சுபநேரம் 4.53-6.23மணிவரை

| | |
|---|---|
| மேடம் | வியாபார விருத்தி, சிறு வியாதி, சொத்துப் பிணக்கு, தனவிரயம். |
| இடபம் | கல்வியில் ஆர்வம் , சுபசெலவு, தாய்வழி உறவு, மனச்சஞ்சலம். |
| மிதுனம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, போசன சுகம், சுப நிகழ்வு. |
| கடகம் | கடின வார்த்தை, வேலைச்சுமை, மரியாதைக் குறைவு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | ஜனவசியம், பெரியோர் சந்திப்பு, தேகநலன், தெய்வசிந்தை. |
| கன்னி | அமைதிக் குறைவு, சுப செலவு, கௌரவக் குறைவு ,முயற்சி தாமதம். |
| துலாம் | தனலாபம், காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | நிலை மாற்றம், அதிகாரம், கடின உழைப்பு, போசன சுகம். |
| தனுசு | புதியதிட்டமிடல், செய் தொழில் விருத்தி, வீண் பயம், முயற்சிதாமதம். |
| மகரம் | வாகன பயம், எதிரிகள் தொல்லை, காரிய தடங்கல், பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | நல்ல வரவேற்பு, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி பலிதம், திடீர் பயணம், |
| மீனம் | நல்ல சம்பவம், முயற்சி கைகூடும், தேக நலன், பாராட்டு. |

வளவன்

## இந்தியா செல்லும் அனைவருக்கும் போலியோ தடுப்பு மருந்து கட்டாயம்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

இந்தியாவுக்குச் செல்லும் சகலரும் போலியோ நோய் தடுப்பு மருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையர்கள் திருத்தல யாத்திரை வியாபாரம் , நண்பர் – உறவினர் சந்திப்பு எனப் பல காரணங்களுக்காக இந்தியாவுக்குச் சென்று வருகின்றனர். இந்தியாவில் பிஹார் உட்பட சில மானியங்களில் போலியோ நோய் தீவிரமடைந்திருப்பதையடுத்தே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்குப் பயணமாவதற்கு இருவாரங்களுக்கு முன்னர் இத்தடுப்பு மருந்தை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள வேண்டும். இத்தடுப்பு மருந்தை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும். துறைமுக மற்றும் விமான நிலைய சுகாதாரி அலுவலகங்களிலும் பொரளையிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திலும் இத்தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

1993 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் எவரும் போலியோ நோய்க்கு உள்ளாகவில்லை . இந்நிலைமையைத் தொடர்ந்தும் பேணவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (5)

## சர்வதேச மனித உரிமைகள் தினம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளை நடத்தும் சர்வதேச மனித உரிமைகள் தினமும், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் 60 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நாளை வியாழக்கிழமை பி. ப 1 .30 மணிக்கு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினர்களாக உதயன் பத்திரிகையின் பொது முகாமையாளர் கே. பாலசுப்பிரமணியம், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ,தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மு. வாமதேவன், யாழ்.வலய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல் வரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-2)

## திருப்பாவை விரத பூஜை

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் திருப்பாவை விரத பூஜைகள் நடை பெற்று வருகின்றன.

பூஜைகள் தினமும் காலை 4.00 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பித்து அபிசேக ஆராதனைகளை அடுத்து ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை 30 பாட்டுக்களும் ஓதப்படுவதுடன் நிறைவு பெறுகின்றது. (ஓ-36)

## ஆத்ம சாந்தி நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முன்னை நாள் இந்து கலாச்சார அமைச்சரும் பராளுமன்ற உறுப்பினருமாகிய அமரர் தியாகராசா மகேஸ்வரனின் முதலாம் அண்டு திதியை முன்னிட்டு அவரது ஆத்ம சாந்தி வேண்டி 20 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ செல்வ சந்நிதி ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனை பூசை வழிபாடுகள் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் ஆச்சிரமத்தில் மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளதால் அன்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு சந்நியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை கேட்டுக்கொள்கிறது. (ஓ-35)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்பில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான செயலமர்வு இம்மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளதால் உயர்தர வகுப்பில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனை வரும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேத நாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். ஓ

*****

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலை அதிபர்களுக்கு யுனிசெவ் (UNICEF) அனுசரணையுடனான, பாடசாலை மட்ட அமுலாக்கல் திட்டம் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெற உள்ளது. ஏற்கனவே டிசம்பர் 8, 10 ஆம் திகதிகளில் நடைபெற்ற செயலமர்வில் பங்குபற்றிய அதிபர்கள் 23ஆம் திகதியும் ஏனைய பாடசாலை அதிபர்கள் 24 ஆம் திகதியும் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் பாடசாலைப் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள் உட்பட ஒரு பாடசாலையிலிருந்து மூவர் மட்டும் பங்குபற்றலாம் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (ஓ-19)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு

(புத்தூர்)

வலி. கிழக்குப் பிரதேச சபை தலைமை அலுவலகம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் வழங்கப்படவுள்ளது. அத்துடன் முன்பள்ளிகளுக்கான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

# மக்களின் நன்மை கருதிப் பல முன்னேற்றகரமான வேலைத் திட்டங்கள்

## நல்லூர் பிரதேச சபையின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை, வரியிறுப்பாளர்களினதும் பொது மக்களினதும் நலன் கருதி அடுத்த ஆண்டு பாரிய வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க இருக்கின்றது. இத்திட்டம் பூர்த்தியடைவதன் மூலம் மக்கள் மத்தியில் இருந்து வந்த குறைபாடுகளும் விரைவில் நீங்கிவிடும்.

இவ்வாறு நல்லூர் பிரதேசசபை செயலாளர் எம். சாந்தசீலன் மேற்படி சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசும் போது கூறினார்.

பிரதேச சபைக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட தற்காலிக மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பிரதேச சபை செயலாளர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது,

எமது சபை மக்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதிலும் வாழ்வாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் பொறுப்புடன் செயலாற்றி வருகின்றது. எமது பகுதியிலுள்ள வடிகால், வாய்க்கால்கள் காலத்துக்குக் காலம் துப்பரவு செய்யாததினாலும் பொது மக்களின் ஒத்துழைப்பு இன்மையாலும் கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் வாய்க்கால் வழியே வெள்ளம் ஓட முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் குடியிருப்பு நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்க வேண்டிய நிலை உருவானது. எமது பகுதியிலுள்ள நந்தாவில் குளம் சீரமைக்கப்பட்டு வெள்ளப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவிருக்கிறது.

திருநெல்வேலிப் பொதுச் சந்தையின் பாரிய கட்டிடப் பணிகள் அடுத்த ஆண்டுக்குள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும். இதன் மூலம் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் இருந்து வரும் சிரமங்கள் முழுமையாகத் தீர்க்கப்படும்.

கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள பொது நூலகம் வசதியீனங்களுடன் இருப்பதனால் மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகிறது. இதனைக் கருத்திற் கொண்டு பல வசதிகளையும் கொண்ட நவீன முறையில் புதிய இரு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதே போல் மக்களின் நன்மை கருதிப் பல முன்னேற்றகரமான வேலைத் திட்டங்களைச் செய்யச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ஓ-5)

## அனலைதீவு - எழுவைதீவு - கரம்பொன் படகுச்சேவை பற்றிய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வருட காலத்திற்கு முன்புவரை அனலைதீவு - கரம்பொன் படகுச்சேவை அனலைதீவிலிருந்து எழுவைதீவு சென்று பின்னர் கரம்பொன் கண்ணகை அம்மன் கோவில் துறைமுகம் வரை நடைபெற்று வந்தது.

எனினும் தற்பொழுது அனலைதீவில் இருந்து கரம்பொன் வரையும், எழுவை தீவில் இருந்து கரம்பொன் வரையும் என இருபடகு சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதனால் இவ்விரு தீவுகளையும் சேர்ந்த மக்கள் ஓர் தீவிலிருந்து மற்றய தீவுக்கு செல்வதற்கு கரம்பொன் வந்து மீண்டும் மற்றய படகில் செல்ல வேண்டிய கஷ்டத்திற்குள்ளாகியுள்ளதால் இப்படகு சேவையை முன்னர் நடத்தியது போல் அனலைதீவு - எழுவைதீவு - கரம்பொன் வழியாக நடத்துமாறு அப்பிரதேச மக்கள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை அண்மையில் அரசாங்கத்தால் டீசல் விலை குறைக்கப்பட்டதால் அனலைதீவு - கரம்பொன் படகுக்கட்டணம் பெரியவர்களுக்கு ரூ. 50 இலிருந்து ரூ. 40 ஆகவும் சிறுவர்களுக்கு ரூ. 40 இலிருந்து 30 ஆகவும், எழுவைதீவு - கரம்பொன் படகுக் கட்டணம் பெரியவர்களுக்கு ரூபா 40 இலிருந்து 30 ஆகவும் சிறுவர்களு க்கு ரூபா 30 இலிருந்து 20 ஆகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓ

## பரிசில் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட கணித விஞ்ஞான வினா விடைப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்கள் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்திற்கு சமூகமளித்து தமக்குரிய பரிசில்களை பெற்றுக்கொள்ளுமாறு யாழ் வலய கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். ஓ

## வீட்டுக் கழிவுகளை வீதிகளில் போட வேண்டாம்

(யாழ்ப்பாணம்)

வீதியோரங்களில் கழிவுகளைப் போட வேண்டாம் என யாழ். மாநகர் சபை ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். அண்மைக் காலமாக மக்கள் வீட்டிலுள்ள குப்பைகள், தாவரக் கழிவுகள் என்பவற்றை வீதியோரங்களில் போடும் தன்மை காணப்படுகின்றது. இதனால் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதுடன் அக் கழிவுகளை உடனுக்குடன் அகற்ற முடியாத சூழ் நிலையும் காணப்படுகின்றன. எனவே மக்கள் தமது வீட்டுக் கழிவுப் பொருட்களை சேகரித்து வைக்குமாறும் அவற்றை மாநகர சபை ஊழியர்கள் வாகன ங்கள் மூலம் எடுத்துச் செல்வார்கள் எனவும் தெரிவித் துள்ளார். ஓ

## தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கான அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர்கள், வலயக் கல்வி அலுவலகத்துக்கு சமூகமளித்து டிசம்பர் மாத சம்பளப் பட்டியலில் கையொப்பமிடுமாறு வடமராட்சி வலயக் கணக்காளர் ஆ. கிரிதரன் அறிவித்துள்ளார். ஓ

## கல்வியியற் கல்லூரி உத்தியோகத்தர்களுக்கான வேதனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உத்தியோகத்தர்களுக்கான மார்கழி மாத வேதனம் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக பீடாதிபதி அறிவித்துள்ளார். ஓ

## யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி - 2008

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று நடைபெறவுள்ளது. ஆதலால் இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அணிகள் நாளை மறுநாள் வெள்ளிக் கிழமைக்கு முன்னர் செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்டள்ளது. அணி ஒழுங்கு தெரிவு 20 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளதாக கழகத்தின் செயலாளர் ஆர். சிறி றமணன் அறிவித்துள்ளார். ஓ

## இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும், வெளிமாவட்டங்களில் இருந்து வந்து இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள், சம்பளப் பட்டியலில் கையொப்பமிடுவதற்கு அவரவர் கடமையாற்றும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட வரவுச் சான்றிதழுடன் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் கேட்டுக் கொள்கின்றார். ஓ




## "சிறுவர் சங்கமம்"

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு இலங்கை அனுசரணையில் சாந்திகம், குடும்ப புனர்வாழ்வு நிலையம், SOND இணைந்து நடாத்தும் 'சிறுவர் சங்கமம்' நிகழ்வு இன்று புதன் கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 3 மணி வரை நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் யாழ்ப்பாண J/87 இளம் தளிர் சிறுவர் கழகத் தலைவர் என். அப்துல்லா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது. (ஓ-4)

## விஷேட கலந்துரையாடல்

(கரவெட்டி)

"நிஷா" வெள்ள அனர்த்தத்தினால் கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் விவசாயத்துறையில் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் ஆராய்வதற்கான விஷேட கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த விவசாய சம்மேளனத் தலைவர்கள், பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-5)



யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கொரிய அனுசரணையுடன் அமைக்கப்படும் கட்டடத்தின் தோற்றத்தையும், கொரிய அரசினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு 10 கொன்ரேயினர்களில் எடுத்துவரப்பட்ட இயந்திர சாதனங்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 14

### பிற துறைகளில் முன்னேற்றம்

### கிரேக்க – உரோம இலக்கிய ஆய்வு

ஆதி வரலாற்றுக் கால இலங்கையைப் பற்றிய தகவல்கள் கிரேக்க – உரோம நூல்களிலும் அடங்கியுள்ளன. அண்மைக் காலத்தில் இத்தகவல்களைப் புதிய நோக்குடன் ஆய்வு செய்தோருள் இலங்கை அறிஞரான பேராசிரியர் டி.பி.எம். வீரக்கொடி முக்கியமானவர். இவருடைய வெளியீடுகளும் பேராசிரியர் போபே ஆரச்சியின் வெளியீடுகளும் இந்நூலுக்குப் பயனுள்ளவையாய் அமைந்துள்ளன.

### நாணயவியல்

இந்நூலுக்குப் பயனுள்ள குறிப்பிடத்தக்க சான்றுகள் நாணயவியல் ஆய்வு மூலமும் கிடைத்துள்ளன. இவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை பேராசிரியர் போபே ஆரச்சியுடன் கப்டன் ராஜா விக்ரமஸிங்ஹ கூடி எழுதி வெளியிட்ட நூலாகும். இலங்கையின் தென்பாகத்தில் கிடைத்த பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்களும் கிரேக்க உரோம நாணயங்களும் இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவை இலங்கையின் ஆதி வரலாற்றுக்கு மிகவும் பயனுள்ளவை. முதற் தடவையாக இலங்கையில் கிடைத்த தமிழ்ப்பிராமி எழுத்துக்களைக் கொண்ட நாணயங்கள் இவற்றுள் காணப்படுகின்றன.

### வரலாற்று மொழியியல்

கடந்த நாற்பதாண்டுக் காலத்தில் அமெரிக்க, ஐரோப்பியப் பல்கலைக் கழகங் களைச் சேர்ந்த அறிஞர் பலர் இலங்கை தொடர்பாகச் சமூகவியல், மானிடவியல் ஆகிய துறைகளில் பெரும் ஆர்வம் காட்டியிருந்தனர். இதன் விளைவாகச் சில முக்கிய ஆய்வுகள் இத்துறைகளில் நடத்தப்பட்டன. இவற்றில் அமெரிக்க , ஐரோப்பிய அறிஞர்கள் மட்டுமின்றி இலங்கை அறிஞர்களும் பங்குபற்றியுள்ளனர். வரலாற்று ஆய்வில் புதிய கண்ணோட்டங்களைப் பயன்படுத்த இவர்களுடைய ஆய்வுகள் உதவியுள்ளன. இலங்கையின் மொழிகளை ஆய்வு செய்வதிலும், ஆர்வம் ஏற்பட்டிருந்தாலும் வரலாற்று மொழியியல் சார்ந்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே உள்ளன.

மொழியியல் வரலாற்று மொழியியல் எனப்படும் பிரிவு இலங்கையின் ஆதிவரலாற்றுக் கால மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் விளங்கிக் கொள்ள மிகவும் பயனுள்ள ஒரு பிரிவாகும். ஆதி வரலாற்றுக் காலத்தில் பேசப்பட்ட மொழிகள், பிற வெளியுலக மொழிகளுடன் இவை காட்டிய உறவுகள், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மொழிகளின் எச்சங்களாய் இம் மொழிகளில் காணப்பட்ட சொற்கள் மற்றும் பண்புகள் பிற் காலத்து மொழிகளின் ஆக்கத்துக்கு இவை வழி வகுத்தமை போன்ற முக்கிய விடயங் களைப் பொறுத்து எழும் வினாக்களுக்கு விடை காண வரலாற்று மொழியியலின் உதவி தேவை.

இன்று இலங்கையில் பெரும்பாலோரால் பேசப்படும் மொழியாகிய சிங்கள மொழி எவ்வாறு தோன்றியது, எத்தகைய மொழிக் கூறுகளைக் கொண்டு வளர்ச்சி பெற்று இன்றைய நிலையை அடைந்தது என்பன போன்ற முக்கியமான வினாக்களுக்கு ஏற்கக்கூடிய விடைகாண இலங்கை மொழிகள் ப ற்றிய வரலாற்று மொழியியல் ஆய்வு அதிகம் வளர்ச்சி பெறவில்லை எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையின் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் பல படிக்கப்பட்டு வெளியிடப்பட்டதுடன் இக் கல்வெட்டின் மொழிக்கும் பிற்காலச் சிங்கள மொழிக்கும் இடையே இருந்த உறவு பற்றி ஆய்வு செய்ய அறிஞர் சிலர் ஆர்வம் கொண்டனர். சில தொடக்க முயற்சிகளின் பின், இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் ஜெர்மன் அறிஞரான பேராசிரியர் வில்ஹெல்ம் கைகர் அக்காலத்து வரலாற்று மொழியியல் அடிப்படையில் பிராமிக் கல்வெட்டுக்களின் மொழியையும் பிற்காலத்துச் சிங்கள மொழியையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து சிங்கள மொழியின் சுருக்க வரலாற்றையும் இலக்கணத்தையும் வெளியிட்டார், இதுவே நீண்டகாலமாகச் சிங்கள மொழியின் வரலாற்றை எடுத்துரைக்கும் முக்கிய நூலாக இருந்து வந்துள்ளது.

அண்மைக்காலத்தில் சிங்கள மொழி தொடர்பான மொழியியல் ஆய்வு நடத்தியவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோர் எம்.எச். பீட்டர் ஸில்வா, ஸுகதபால த ஸில்வா, ஜேம்ஸ் கெயர் , டபிள்யு. எஸ். கருணா திலக ஆகியோராவர். பீட்டர் ஸில்வா 1961 இல் ஒரு முக்கியமான ஆய்வுரையை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பித்தார். சிங்கள மொழியில் திராவிட மொழிகளின் செல்வாக்குப் பற்றிய இந்த ஆய்வு இதுவரை வெளியிடப்படவில்லை. பீட்டர் ஸில்வா மட்டுமன்றி, சி.ஈ. கொடகும்புர என்ற அறிஞரும் 1940 களிலும் 1950 களிலும் சிங்களத்தில் உள்ள திராவிட மொழிப் பண்புகளைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இவற்றைத் தொடர்ந்து ஸுகதபால த ஸில்வா மற்றும் ஜேம்ஸ் கெயர் ஆகியோர் சிங்களத்தில் திராவிட மொழிப்பண்புகள் முக்கியமான வகையில் இருப்பதை உறுதிப்படுத்தினர். அது மட்டுமன்றி, சிங்களமும் தமிழும் இலங்கையில் பேசப்படுமுன், இந்து ஆரிய மொழிக் குடும்பக் கிளையையோ திராவிட மொழிக் குடும்பத்தையோ சேராத ஒரு மொழி அல்லது பல மொழிகள் இலங்கையில் பேசப்பட்டன என்பதை எடுத்துக் கூறினர். இது மிகவும் முக்கியமான ஒரு வரலாற்று விடயமாகும். கவலைக்குரிய வகையில் இம் மொழிகள் பற்றி அறிவியல் அடிப்படையிலான ஆழ்ந்த ஆய்வு இதுவரை நடத்தப்படவில்லை.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மொழிகளை அறிவதற்குச் சான்றுகளைப் பெற முடியாது என்பது உண்மைதான். வரலாற்று மொழியியலில் மேலும் முன்னேற்றங்கள் ஏற்படும் போது, சிங்களத்திலும் இலங்கைத் தமிழிலும் உள்ள, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இடம்பெற்று வந்த கூறுகளைக் கண்டு கொள்ள வாய்ப்பு ஏற்படலாம்.

இந்து ஆரிய மொழிகள் மற்றும் திராவிட மொழிகள் இலங்கைக்குப் பரவுமுன், அங்கு வேறு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மொழிகள் பேசப்பட்டன என்பதை மறுக்க முடியாது. எனினும், இலங்கையின் மிக முற்பட்ட கல்வெட்டுக்களின் மொழியை ஆராய்ந்தோர் இவ் விடயத்தைப் பொதுவாகப் புறக்கணித்துள்ளனர். இப்பழைய கல்வெட்டுக்களில் பல சொற்கள் இலகுவில் பொருள்கண்டு கொள்ளக்கூடிய சொற்கள் அல்ல. எனினும் இவற்றை எப்படியாவது இந்து ஆரிய மொழிச் சொற்களின் வழிவந்தவையாகக் காட்டப் பலர் முனைந்துள்ளர். வேறு சிலர் அண்மைக் காலத்தில் எந்த வித சிரமமுமின்றித் திராவிட மொழிச் சொற்களாக இவற்றை அடையாளங் காணத் தயங்கவில்லை. இச் சொற்களுள் ஒரு சில ஆவது இடைக்கற்கால மக்கள் பேசிய மொழிகளைச் சேர்ந்தவையா என்று ஆய்வு செய்ய அவர்கள் எண்ணவில்லை. சிங்கள மொழியின் ஆக்கத்து மட்டுமன்றித் தமிழின் வளர்ச்சிக்கும் இடைக்கற் காலத்து மொழிகள் பங்களிப்புச் செய்துள்ளன என்பதில் ஐயமில்லை.


பேராசிரியர்
கா. இந்திரபாலா

மொழியியலாளர் ஜேம்ஸ் கெயர் சுட்டிக் காட்டியுள்ளது போல், சிங்களம் இலங்கையில் பேசப்படுமுன், வேறு ஒரு மொழி அல்லது மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தை சேர்ந்தவை எனக் கொள்ள முடியாதவை எனத் தோன்றும் தன்மையுடைய மொழிகளாய், பேசப்பட்டன என்பது தெளிவாகும். ஆனால் இவ்விடயம் பொதுவாகக் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. இந்தத் தொல்கால மொழிகள் நாம் பொதுவாக எண்ணுவதைக் காட்டிலும் கூடுதலான ஒரு பங்கை ஆதி இலங்கையில் வகித்தன.

ஜேம்ஸ் கெயருடைய கருத்தை ஆதரிக்கும் வகையில், இன்னொரு தலை சிறந்த மொழியியலாளரான ஸுகதபால த ஸில்வா, சிங்களத்தில் அடிக்கடி பயன்படும் சில சொற்களை எடுத்துக் காட்டி, இவை வடமொழியிலிருந்தோ தமிழழிலிருந்தோ பெறப்படாத சொற்கள் எனக் கூறியுள்ளார். உதாரணமாக, ,*ஒலுவ* (தலை), *பெல்ல* (கழுத்து) , *ககுல* (கால்), *கலவ* (தொடை).

வரலாற்று மொழியியலாளர் மேலும் ஆய்வு நடத்திய பின்னரே இந்தத் தொல் மொழிகளின் பங்களிப்புப் பற்றித் தெளி வாக அறிந்து கொள்ளலாம். (தொடரும்)

# கல்வியில் சமத்துவமின்மை ஒரு தொடர்கதை 5



அநேகமான ஆசிரியர்கள் கற்றல் இடர்ப்பாடுகளை பெற்றோர், வீட்டுப் பின்னனி, பிள்ளைகளின் உளக் குறைபாடுகள் என்பவற்றின் மேற் சாட்டுகின்றனர். இவற்றுள் மிக மோசமானது இக் குறைபாடுகளை எவ்விதத்திலும் தீர்க்க முடியா தென சிலர் கருதுவதேயாகும்.

அவர்களது பயிற்சிக் கல்லூரிகளிலும், பாரம்பரியத்திலிருந்தும் சிலவேளைகளில் கல்விக் கொள்கைகளைப் பிரகடனப் படுத்தும் போதும் பெறப்பட்ட கல்வி பற்றிய நோக்குகள் என அழைக்கக் கூடியவற் றுடன் அவர்களது பிணைப்பின் காரணமாக இந்த நம்பிக்கை நியாயமானது என அவர்கள் கருதலாம்.

சமூகக் கொள்கைகளும், ஆதிக்க மிக்க உளவியற் கோட்பாடுகளும் பிரச்சனைக் குரிய பிள்ளைகள் கற்பிக்க முடியாதவர்கள் என நம்புவதற்கு ஆசிரியர்களை வழிப்படுத்தியுள்ளன. இது அநேகமாக பொருளாதார வறுமையின் பிரதிபலிப்பாகும். மேலும் ஆரம்பக் கல்வியின் வித்தியாசமான கட்டங்களில் எதிர்பார்த்த மட்டங்களை அடைவதற்கு மாணவர் தவறியமையின் உச்ச நிலைக்கு ஆசிரியர்களும் பங்களிப்பு செய்துள்ளனர் எனவும் கொள்ளலாம்.

பாடசாலை அபிவிருத்திச் செயற்பாட்டின் அலகாகக் கருதப்படுகிறது. கிராமத்திலுள்ள கோவிலைப் போன்று பாடசாலை தன்னைச் சூழவுள்ள சமூகத்தின் பிரதிபலிப்பாகும். எனவே குறைவிருத்தியடைந்த சுற்றாடல்களினால் பாடசாலைகளும் பாதிக்கப்படக் கூடிய நிலையுள்ளது. இதனால் பாடசாலை அதன் அபிவிருத்திச் செயலாற்றலை செய்ய முடியாதிருக்கும். உண்மையில் அபிவிருத்தி பொருள்களுடன் ஆரம்பிப்பதில்லை. அது மக்களுடனும் அவர்களது கல்வியுடனும், ஒழுங்கமைத் தலுடனும், ஒழுக்கத்துடனும் ஆரம்பமாகின்றது. அபிவிருத்தி இடம் பெறுவதற்கு வறுமை நீக்கப்படுவது முன் தேவையாகும். அது மேலுள்ள காரணிகளினதும் குறைபாடுகளை நீக்குவதிற் தங்கியுள்ளது.

பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் கல்வியின் மேல் சாதகமான வளர்ச்சிக்கான கருவியாக அல்லாமல் வழிகாட்டும் உபகரணமாக ஆதரவளிக்கும் பாத்திரத்தை ஏற்றுள்ளது.

இது அன்னியமானதாக அல்லது காலங்கடந்ததாக உள்ள பிரமாணங்களின் அடிப்படையில் மாணவர்களை தெரிவு செய்தலுக்கு வழிப்படுத்தியுள்ளது. இத் தொழில் முறையினூடாக வெற்றிகரமாக கடந்து செல்பவர்கள் கிரமப்பாடசாலைகளை போசனைக் குறைந்த நிலையில் விட்டு விட்டு நகர்ப்புற பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். உண்மையில் என்ன நடக்கிற தெனில் நல்ல போசாக்குள்ள நன்கு கற்ற பெரும்பாலும் நகர் சார்புடையவர்களினால் வறியவர்களுக்கும் சக்தியற்றவர்களும், வளம் குறைந்தவர்களும் முற்றாகக் கவனிக்கப் படாமல் விடப்படுவதோடு அதன் காரணமாக கிராமிய மக்களின் சமூக பொருளாதார தரங்களின் படிப்படியான கீழ் இறங்கலும் ஏற்படுகிறது. இவ்வாறாக கல்வியில் பயன் பெறுவோர் கிராமப்புறத்தைச் சேர்ந்தோராயினும், நகர்புறத்தைச் சேர்ந்தோராயினும் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் நல் நிலையில் இருக்கின்றனர். உண்மையில் கல்வி தற்போதுள்ள சமனிலிகளைக் குறைப்பதை விட்டு வகுப்பு ஏற்றத்தாழ்வுகளையும் கிராமப்புறத்தையும் நகர்ப்புறத்தையும் விலகிச் செல்லச் செய்கிறது.

பொதுவாக பாடசாலை முறைமையின் பாடவிதானமும் பாடசாலை வேலைத்திட்டங்களும் 3ம் நாட்டில் சிறுபான்மையான மாணவர்கள் தொடர்பாக மட்டுமே ஒப்பீட்டளவில் நன்கு செயற்படுகிறது. நிதி மற்றும் தடைகள் போன்ற காரணிகள் பெரியளவிற் தோன்றாவிடில் கூடியளவு பெரும்பான்மையானோர் இப்பாடவிதானத்திலிருந்து பயன் பெறுவர். எவ்வாறாயினும் வேலைத்திட்டங்களினால் எவ்விதமான திருப்திகரமான பயனையும் பெற முடியாத குழுவொன்று இருக்கவே செய்யும். இக்கல்வி வேலைத்திட்டங்கள் அந்தஸ்து, பொருளாதார வாய்ப்புகள் என்பனவற்றை தீர்மானிப்பவைகளாக ஆகியுள்ளன. ஆரம்பக்கல்வியைப் பூர்த்தி செய்தல் இடைநிலைக்கல்விக்கு புகுதல், வாழ்க்கையின் அந்தஸ்து என்பனவற்றுள் பிரவேசிப்பதற்கான முறைமையின் முதற் படி மட்டுமேயாகும்.

எந்தவொரு கல்வி முறைமையினதும் முதுகெலும்பாகிய ஆரம்பக் கல்வி முறைமையையும் பெருந் தொகையான மாறிகள் தாக்குகின்றன. அவற்றுள் முன்னிற்பவை இடைநிலை மட்டத்தில் உள்ள மாணவர்களை விட ஆரம்ப மட்டத்தில் உள்ள மாணவர்களை கட்டுப்படுத்துவதும், செல்வாக்குச் செலுத்துவதுமான சமூகப் பொருளாதார மாறிகளாகும். இது பிள்ளை, பெற் றார், ஆகிய இரு பாலாரினதும் சமூகப் பொருளாதார உணர்வினா லேயாகும்.

பிள்ளையும் பெற்றோரும் சில சமூக உளவியல் காரணிகளை தாண்டிச் செல்வதற்கு முடியாதிருக்கின்றனர். இதனால் பிள்ளைகளின் ஆரம்பக்கல்வி பாதிக்கப்படுகின்றது. இது கிராமிய நியதிகளுள் உள்ளார்ந்துள்ள தோல்வி மனப்பாங்குகள், குறை எதிர்க்கும் அணுகுமுறைகள் என்பனவற்றுடன் தொடர்புபடுகிறது. கொள்கை ஆக்குவோர், திட்டமிடுவோர், கொள்கைகளை அமுல் நடத்துவோர் ஆகியோரது முயற்சிகள் ஆரம்பக்கல்வியை மீளமைத்தல், அபிவிருத்தி செய்தல் என்பவற்றுக்கான வேலைத்திட்டங்கள் எல்லாம் இருந்த போதிலும் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் குறிப்பாக குறைவளம் உள்ள பகுதிகளில் ஏற்படவில்லை. (முற்றும்)

தம்பியப்பா காங்கேசபிள்ளை
முன்னாள் அதிபர்
பலாலி ஆசிரியர் கலாசாலை

# பாகிஸ்தான் மீது வான் தாக்குதலை நடத்த இந்தியா தயாராகவுள்ளது

## அமெரிக்க ஊடகம்

(இஸ்லாமபாதி)

இந்திய விமானப்படையினர் பாகிஸ்தான் மீது தாக்குதலை நடத்த சாத்தியம் உள்ளது. என்று அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்று நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பெண்டகனைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் இதனை உறுதி செய்திருப்பதாகவும் அச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் உட்பகுதியில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் என்று சந்தேகிக்கப்படக்கூடிய நிலைகள் மீது இந்திய விமானப் படையினர் தாக்குதல் நடத்தக் கூடும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மேலும் கடந்த சனிக்கிழமை பாகிஸ்தான் வான்பரப்பில் இந்திய விமானப்படை விமானங்கள் உள்நுழைந்தது என்றும் ஒரு இருக்கை கொண்ட இலகு வகை விமானமே வான் பரப்பில் பறப்பை மேற்கொண்டது என்று அமெரிக்க உளவுப் பிரிவு தகவல்கள் கூறுவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்ததாக அமெரிக்க தொலைக்காட்சியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (5)

# பாகிஸ்தானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை இல்லை

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(டில்லி)

பாகிஸ்தானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பது பற்றி இந்தியா எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லையென இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

எனினும் மும்பை தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்தாலே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு சுமுகமான முறையில் இருக்குமென அவர் கூறினார்.




மும்பைத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு பிரித்தானியா விடுத்திருந்த கோரிக்கையை பாகிஸ்தான் ஏற்கனவே நிராகரித்திருந்தநிலையில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (5)

உலக தரிசனம்

# கனவில் தோன்றும் காட்சிகளை புகைப்படமாக்கும் தொழில்நுட்பம்

## ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

ஒருவர் உறக்கத்தில் காணும் கனவுகளை விழித்தெழுந்ததும் புகைப்படங்களாகக் கண்டுகளிப்பதற்கு வழிவகை செய்யும் மென்பொருள் ஒன்றை ஜப்பானிய கயோடோ நகரிலுள்ள நரம்பு விஞ்ஞான கணிப்பு ஆய்வு கூட்டத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.



மூளையின் சிந்தனைகளிலிருந்து பிரதிபிம்பங்களை உருவாக்கும் மனதை வாசித்தல் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளமை உலகில் இதுவே முதல் தடவையாகும்.

இதற்கு முன் இந்த வருட ஆரம்பத்தில் அமெரிக்க கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மனதை ஊடுகாட்டும் சாத்தியம் குறித்த எண்ணக்கருவை முன் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பானிய விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட இந்தப் புதிய மென்பொருளானது மூளையிலிருந்தான சமிக்ஞைகளைப் பெற்று அவற்றைத் தனது நிகழ்ச்சித் திட்ட ஒழுங்கமைப்புக்கு ஏற்ப ஒப்பீடு செய்து புகைப் படமாக மாற்றும் வல்லமை கொண்டதாகும். எனினும் தற்போது கறுப்பு-வெள்ளை புகைப் பட பிரதிமையாக காட்சிப்படுத்தப்படும் இந்தப் புகைப்படங்கள் தொடர்பான துல்லியத் தன்மையை மேம்படுத்த மேலும் ஆய்வுகள் முன்னெடுக்கப்படவேண்டியுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (5)

# உளவு பார்க்க வந்த இந்திய பெண்ணை பிடித்துள்ளோம்

## பாகிஸ்தான் இராணுவம் தகவல்

(இஸ்லாமாபாத்)

மும்பை தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து இந்திய உளவாளிகள் பாகிஸ்தானில் ஊடுருவி வருவதாக பாகிஸ்தான் இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லை பகுதியில் பர்தா அணிந்து நின்று கொண்டிருந்த ஒரு பெண்ணை பாகிஸ்தான் இராணுவத்தினர் பிடித்துள்ளனர்.

விசாரணையில் அந்த பெண் இந்திய உளவுத்துறையை சேர்ந்த உயர்மட்ட ஊழியர் என்று தெரியவந்துள்ளதாகவும் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. தற்போது அந்த பெண்ணை இஸ்லாமாபாத்தில் வைத்து விசாரணை நடத்தி வருவதாகவும் கூறியிருக் கிறது.

இதனிடையே கடந்த ஒக்டோபர் மாதம் இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் நின்ற ஒரு உளவாளியை பிடித்தாகவும் அவர் இந்திய உளவாளி என்றும் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

அவர்கள் இருவரும் இந்திய உளவாளிகள் தான் என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் உள்ளதாகவும் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. (5)


# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து

## நத்தார் புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு

**01. கூட்டுறவு நகர் 1 127 ,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

**02.கூட்டுறவு நகர் 2 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

**01. கேக்:**

கேக் தயாரிப்பதற்கான சகல பொருட்களும் உள்ளடக்கப்பட்ட ரூபா.750/- பெறுமதியுடைய பொதி ஒன்று விசேட விலைக் கழிவுடன் ரூபா 690/-ற்கு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

500 கிராம் மாஜரின், 500 கிராம் மா, 500 கிராம் சீனி, 50 கிராம் பிளம்ஸ், 50 கிராம் கஜு, 50 கிராம் கலர் புருட்ஸ், முட்டை, பேக்கிங்பவுடர், ஒயில்பேப்பர், வனிலா, 50 கிராம் இஞ்சி அல்வா, 50 கிராம் பூசணி அல்வா, 50 கிராம் மிக்ஸ் புருட்.

**02. காகிதாதி:**

கொள்வனவு செய்யும் காகிதாதி பொருட்களின் அளவுக்கேற்ப இரண்டு பேனா அல்லது பென்சில் இலவசமாக வழங்கப்படும்

| கொள்வனவு செய்யும் பொருள் | கொள்வனவு செய்யும் தொகை | இலவசமாக வழங்கப்படும் பொருள் |
|---|---|---|
| 80 பக்கம் அட்லஸ் கொப்பி | 12 | 02 பேனா இலவசம் |
| 120 பக்க அட்லஸ் கொப்பி | 6 | 02 பேனா இலவசம் |
| 160 பக்க அட்லஸ் கொப்பி | 5 | 02 பேனா இலவசம் |
| 200 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 240 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 320 பக்க அட்லஸ் கொப்பி | 4 | 02 பேனா இலவசம் |
| 400 பக்க அட்லஸ் கொப்பி | 3 | 02 பேனா இலவசம் |



| கொள்வனவு செய்யும் பொருள் | கொள்வனவு செய்யும் தொகை | இலவசமாக வழங்கப்படும் பொருள் |
|---|---|---|
| சீ.ஆர் கொப்பி 01 | 2 | 01 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 02 | 3 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 03 | 3 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 04 | 2 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர் கொப்பி 05 | 2 | 02 பேனா இலவசம் |
| இரட்டை றூள் | 6 | 02 பென்சில் இலவசம் |
| நாலு றூள் | 6 | 02 பென்சில் இலவசம் |

**03. பாதணிகள்:**

அதிரடி விலைக் கழிவில் விற்றுத்தீர்த்தல் முறையில் சகல பாதணிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்பட்டுள்ளது.

**04. பரிசுப் பொருட்கள்**

பிறந்ததினம்,திருமண நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்களின் போது வழங்கக் கூடிய பரிசுப் பொருட்கள் வகைகளும் விசேட விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

**05.இக்கால கட்டத்தில் கொக்கக்கோலா 1.5 லீற்றர் சோடா 05 கொள்வனவு செய்பவர்களுக்கு 01 கொக்கக்கோலா 1.5 லீற்றர் சோடா இலவசமாக வழங்கப்படும்.**

சோடா ஒன்றின் விலை ரூபா.140/-மட்டுமே.

**06. மேற்படி காகிதாதி பொருட்கள் கொள்வனவு செய்யும் பாவனையாளர்கள் அதற்குரிய சிட்டையை பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் 2009 ஜனவரி மாதத்தில் நடைபெறும் பரிசு குலுக்கலில் தாங்களும் அதிஷ்டசாலியாக முடியும்.**

மேற்படி விலைக் கழிவு விற்பனையில் தாங்களும் பங்கேற்று நத்தார் புதுவருடப்பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடுமாறு எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சீ/1843)

## வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எமது நந்தார் புதுவருட நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# வன்னியில் மனித நேய உதவிகள் தேவைப்படும் வரை தங்கியிருப்போம்

## ஐ.சி.ஆர்.சி. அறிவிப்பு

(கொழும்பு)

உக்கிரமடைந்திருக்கும் மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனித நேய உதவிகள் தேவைப்படும் வரை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் வன்னியில் தங்கியிருக்கும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் சரசிவிஜயரட்ன கூறினார்.

மனித நேய உதவிகள் தேவைப்படும் வரை நாங்கள் அங்கு தங்கியிருப்போம். வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு அண்மையிலேயே நாங்களும் தங்கியிருப்போம் என அவர் தெரிவித்தார்.

1997ஆம் ஆண்டு புதுக்குடியிருப்புக்கு மாற்றப்பட்ட தமது அலுவலகம் தொடர்ந்தும் அங்கிருந்தே செயற்பட்டுவருவதாக சரசி விஜயரட்ன குறிப்பிட்டார்.

ஓமந்தை வடக்குப்பகுதியில் இராணுவத்தினர் முன்நகர்வு நடவடிக்கையை ஆரம்பித்ததைத் தொடர்ந்து கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஓமந்தை சோதனைச்சாவடியில் இருந்து விலகி மோதல் நிலைமை தணிந்ததும் கடமைக்கும் திரும்பியிருந்தது.

இந்த நிலையில் புளியங்குளத்தில் இராணுவத்தினரால் புதிதாக அமைத்திருக்கும் சோதனைச்சாவடியில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவது பற்றி பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

நிரந்தரமான சோதனைநிலையம் அமைக்கப்படும் வரை அதன் ஊடாகப் பயணிக்கும் பொதுமக்கள் ,நோயாளர் காவு வண்டிகள் மற்றும் வாகனங்களின் பயணங்களுக்கு நாம் உதவி செய்வோம் என சரசி விஜய ரட்ன கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக உயிரிழந்த விடுதலைப்புலிகளின் 11 சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் ஊடாக வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5)




ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் சே.சிவநடராசாவின் மணிவிழாவின் போது விழா நாயகன் உரையாற்றுவதையும், மேடையில் செல்வி சி.உதயகலா, திருமதி சூ.சிவநடராசா, வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.மாதவக்குமார் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## உதவி கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்கு ஆசிரியர் சேவை தரம் -1 இல் உள்ள ஆசிரியர்களும் அல்லது ஆசிரிய சேவைத் தரம் 2-1 உடன் உள்ளசேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆரம்பக் கல்வியில் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 26.12.2008 இற்கு முன்னர் தீவக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (5)

## 1.4 புள்ளிகளால் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் குறைவடைந்துள்ளது

(கொழும்பு)

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கடந்த ஒக்டோபர் மாதத்தை விட நவம்பர் மாதம் 1.4 புள்ளிகளால் குறைவடைந்துள்ளதாக மக்கள் கணக்கெடுப்பு புள்ளி விபரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

மக்கள் கணக்கெடுப்பு புள்ளி விபரத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் டி.பி.பி. எஸ்.வித்யாரத்ன தலைமையில் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒக்டோபர் மாதம் 206.6 எனக் காணப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் நவம்பர் மாதம் 205.2 எனக்குறைவடைந்துள்ளது.

அதன்படி 1.4 ஆல் விலைச் சுட்டெண் குறைந்துள்ளது. அதற்கேற்ப மக்களின் வாழ்க்கைச் செலவு 0.7 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

நாட்டின் நெல்விளைச்சல் அதிகரிப்பு, நீர், மின்சாரம், சமையல் எரிவாயு உட்பட பொருட்களின் விலை வீழ்ச்சி போன்றவையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-5)

## பெ.கூ. உதவி பொது முகாமையாளரை இடைநிறுத்த உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் உதவிப்பொதுமுகாமையாளர் லலித் கருணாரத்னவை உடனடியாக அப்பதவியில் இருந்து இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

ஹெஜிங் ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களைப் பாதுகாக்க உத்தரவிடக் கோரி இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன் போதே மூவர் அடங்கிய நீதியரசர் குழு மேற்படி உத்தரவைப்பிறப்பித்துள்ளது.

இதற்கு முன்னரான வழக்கு விசாரணைகளின் போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசந்த டிமெலை அப்பதவியில் இருந்து விலகுமாறு உத்தரவிட்ட உயர் நீதிமன்றம் பெற்றோலிய அமைச்சராக வேறொருவரை நியமிப்பது தொடர்பில் பரிசீலிக்குமாறும் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## கசிப்பு உற்பத்தி செய்த நபருக்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் அபராதம்

### யாழ். நீதிமன்றம் விதித்தது

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் சசிப்பு உற்பத்தி செய்யதார் என்ற குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரிடம் 19 அரை லீற்றர் கசிப்பும் 75 லீற்றர் கசிப்பு உற்பத்திக்குத் தேவையான கோடாவும் மற்றும் சசிப்பு உற்பத்தி உபகரணங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந் நபரை நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிபதி அ.ஆனந்தராஜா முன்னிலையில் யாழ்ப்பாண பொலிஸார் ஆஜர் செய்தனர்.

மேற்படி வழக்கை விசாரணை செய்த நீதிபதி 3 குற்றங்கள் நிரூபிக்கப்பட்டமையால் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை யாழ். மாநகரசபை எல்லைக்குள் கசிப்பு உற்பத்தி செய்த, அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்த ஏழு வழக்குகளை மது வரித்திணைக்களத்தினர் யாழ். நீதி மன்றில் பதிவு செய்தனர். இவ் வழக்குகளை விசாரணை செய்த மேலதிக நீதிபதி அ.ஆனந்தராஜா மொத்தமாக 49 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (5)

## கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் வீடுகளின் பாதிப்பு குறித்து மதிப்பீடு

(கரவெட்டி)

கரவெட்டிப்பிரதேச செயலாளர் பிரிவில் அண்மைய வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பிலான பதிவுகள் நடைபெற்றுவருவதாக கரவெட்டிப் பிர தேச செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

வீடுகள் அழிவு தொடர்பாக கிராம சேவையாளரிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அதனை பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து அந்த விண்ணப்பத்திற்கமைவாக அந்தப் பிரதேச செயலக தொழில்நுட்ப அலுவலகர், சமுர்த்தி அலுவலகர்ள மற்றும் கிராம அலுவலகர்கள் அடங்கிய மதிப்பீட்டு குழு நேரடியாக வந்து வீட்டின் பாதிப்பு குறித்து மதிப்பீடு செய்யும் எனவும் கரவெட்டிப்பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் குறிப்பிட்டார். (5)

### ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில்

## வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 408 குடும்பங்களுக்கு கூரை விரிப்பு

(ஊர்காவற்றுறை)

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த 408 குடும்பங்களுக்கு கூரை விரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அண்மைய கடும் மழை -புயல் அனர்த்தத்தினால் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

இவற்றில் ஆயிரத்து 54 குடும்பங்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தன. இந்நிலையில் 500 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்க ளும் 408 குடும்பங்களுக்கு கூரை விரிப்புகளும் பேருட்டின் ஒருங்கிணைப்பில்யுஎன்.எச்.சி.ஆர்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்க ளுக்கு முழுமையாக உதவிப் பொருட்கள் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவ னத்தால் நுளம்பு வலை,பாய்,வாளி,குடம், துவாய், துணிகள் ,அரிக்கன் லாம்பு,சவர்க் காரம் மற்றும் குழந்தைகளுக்கான சம்போ ஆகியன வழங்கப்பட்டுள்ளன. (5)

## 250 மெகாவோட்ஸ் மின்பிறப்பாக்கி அனலைதீவில் நிறுவப்படவுள்ளது

(ஊர்காவற்றுறை)

அனலைதீவின் மின்சார விநியோகத்திற்காக 250 மெகாவோட்ஸ் மின் பிறப்பாக்கி ஒன்று அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அதனை நிர்மாணிப்பதற்கான இடமும் தயார்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஊர் காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கே. சிறிமோகனன் தெரிவித்தார்.

இப்புதிய 250 மெகாவோட்ஸ் மின் பிறப்பாக்கி நிறுவப்படுவதன் மூலம் அனலைதீவிற்கு முழுமையாக மின்சாரம் வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அனலைதீவில் தற்போது மின் விநியோகித்துவரும் 100 மெகாவோட்ஸ் அளவுடைய மின்பிறப்பாக்கி திருத்தப்பட்டு எழுவைதீவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கூறினார்.

இதன் பிரகாரம் எழுவைதீவிலும் மின் விநியோகம் முழுமையாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் கே. சிறிமோகனன் தெரிவித்தார். (5)

# மகேஸ்வரன் எம்.பி கொலை வழக்கு; எதிரிக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் படுகொலை வழக்கின் பிரதான எதிரியை பிணையில் விடுவிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

மகேஸ்வரன் எம்.பி.யின் படுகொலை வழக்கு விசாரணை, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

வழக்கு விசாரணையின் போது பிரதான எதிரியான ஜோன்ஸ்ரன்கொலின் வெலன்ரைன் மன்றில் ஆஜராகப்பட்டிருந்தார்.


படுகொலை சம்பவத்தினை நேரில் கண்ட சாட்சிகளாக நித்தியானந்தன், மகேஸ்வரன் எம்.பி யின் மெய்ப்பாது காப்பாளரான பொலிஸ் சார்ஜன்ட் தர்மசிறி மற்றும் பென்னம்பல வாணேசரர் ஆலயத்தின் குருக்கள் பஞ்சாட் சரஐயர் குருவாயூரன், சம்பவத்தின் போது காயமடைந்த மகேஸ்வரன் எம்.பியை வைத்தியசாலையில் அனுமதித்த செல்லத்துரை பரம்சோதி நாதன் ஆகிய நான்கு சாட்சிகளும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

விசாரணையின் போது எதிரியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி க.ஜெயக்குமார், எதிரியை பிணையில் விடுதலை செய்ய வேண் டும் என்று நீதிபதியிடம் கோரிக்கை விடுத்த துடன் அது தொடர்பான மனு ஒன்றினையும் சமர்ப்பித்தார்.

எதிரியை பிணையில் செல்ல அனுமதிக்கும் பட்சத்தில் அவர் மீண்டும் நீதிமன்றத்திற்கு ஆஜராவது சந்தேகமே எனவும் அதனால் அவரது பிணை மனுவினை நிராகரிக்குமாறு மன்றில் ஆஜரான அரச சட்டவாதி ஜனக பண்டார வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதி பதி இந்த வழக்குப்பாராதூரமான படுகொலை சம்பந்தப்பட்டது என்பதனால் எதிரியை பிணையில் விடுவிக்க முடியாது என மறுப்புத்தெரிவித்து பிணை மனுக் கோரிக்கையினை நிராகரித்தார்.

அத்துடன், குறித்த வழக்கினை யூரி சபையினரின் முன்னிலையிலா அல்லது நீதிபதி முன்னிலையிலா விசாரிக்க வேண்டும் என்று நீதிபதி எதிரியிடம் வினாவினார். இதன் போது தமிழ்பேசும் யூரி சபையினர் முன்னிலையில் வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என்று எதிரி கோரிக்கை விடுத்ததையடுத்து அதற்கு இணங்கிய நீதிபதி, தமிழ்பேசும் யூரி சபையினர் முன்னிலையில் வழக்கு விசாரணை இடம் பெறும் என அறிவித்தார். வழக்கு விசாரணை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக நடைபெறும் என்றும்



நீதிபதி தெரிவித்து வழக்கினை ஒத்திவைத்தார். (ஓ-5)

# எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் நகைச்சுவை

(கொழும்பு)

என் மீது எவரும் செருப்பை கழற்றி எறியவில்லையே என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நகைச்சுவையாகக்கூறினார்.

ஐ.தே.க.வின் பிரதித்தலைவராக நியமனம் பெற்ற கரு ஜெயசூரிய எம்.பி. நேற்று முன்தினம் கட்சித்தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் உத்தியோகப்பூர்வமாக தனது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் பெருமளவில் செய்தியாளர்களும் கூடியிருந்தனர்.

இங்கு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித்தலைவர் இவ்வாறு நகைச்சுவையாக கருத்துத்தெரிவித்தார். ஈராக்குக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அங்கு செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே செய்தியாளர் ஒருவர் தனது காலணியை கழற்றி புஷ்ஷை நோக்கி வீசியிருந்தார்.

இந்தச் சம்பவத்தை நினைவில் கொண்டே எதிர்க்கட்சித்தலைவரும் இவ்வாறு கூறியிருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் நகைச்சுவையாக இந்தக்கருத்தைக் கூறிய தும் அங்கிருந்த செய்தியாளர் மற்றும் பார்வையாளர் மத்தியில் சிரிப்பொலி எழுந் தது. (ஓ-5)

# இலங்கை இனப்பிரச்சினையை உருவாக்கியதே இந்தியாதான்

## இலங்கையின் முன்னாள் படைத்தளபதி ஹமில்டன் வனசிங்க

தமிழீழ விடுதலைப் புலிகளை உருவாக்கி இலங்கை இனப்பிரச்சினைக்கு காரணமாக இருந்ததே இந்தியாதான் என்று இலங்கையின் முன்னாள் படைத்தளபதி ஹமில்டன் வனசிங்க கூறியுள்ளார்.

1988முதல் 1991 வரை படைத்தளபதியாக இருந்த வனசிங்க கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த கருத்துக்கள்,

தமிழீழ விடுலைப் புலிகளை உருவாக்கியதே இந்தியாதான் அதுவே உண்மை. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந்தியாதான் காரணம். நாங்கள் சிக்கலான நேரங்களில் சீனாவையும் பாகிஸ்தானையுமே சார்ந்திருந்தோம். அவர்களுக்கு நாங்கள் தேவையிருந்தால் நாங்கள் அவர்களுடன் நிற்போம்.

சீனாவிடமும் பாகிஸ்தானிடமும் ஆயுதம் வாங்காதே என்று இந்தியா சொல்லக்கூடாது என்றார். இதனிடையே இலங்கையின் முன்னாள் வான்படைத்தளபதி ஹரி குணதிலக்கவும் இலங்கையின் ஆயுதக் கொள்வனவு விடயம் சுதந்திரமானது என்று கூறியுள்ளார். (ஓ-5)

# வினைத்திறமை காண் தடைபரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு மூன்று வகையான சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைக்கு தனித்தனி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பங்களை இம்மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் மேற்படி பரீட்சைகள் ஜனவரி மாதம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சேவையில் நேரடி ஆள் சேர்ப்பு மூலம் நியமனம் செய்யப்பட்ட வகுப்பு II; வகுப்பு III-I ச் சேர்ந்த அலுவலகப் பணியாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை வடக்கு மாகாண பொதுச் சேவையின் இலங்கைத் தொழில் நுட்பவியல் சேவை வகுப்பு II பிரிவு "B", "A" யில் சேவை புரிபவர்களுக்கான முதலாம், இரண்டாம் வினைத்திறமை காண் தடைப்பரீட்சை வடக்கு மாகாண பொதுச்சேவையில் கடமை புரியும் வகுப்பு II பிரிவு "A", "B" மற்றும் வகுப்பு I-I ச் சேர்ந்த சாரதிகளுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை.

உரிய திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் சிபாரிசுடன் டிசெம்பர் 22 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் தனித்தனியாக அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறும் என வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஓ-5)

# வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

## மஞ்சள்

Botanical Name - Curcuma longa
Family- Zingiberaceae
Engl - Turmeric
Sinh - Kaha

பலபருவம் வாழும் குறுஞ்செடி; 80 செ.மீ.உயரம் வளரக்கூடியது; தண்டு தரையடியில் காணப்படும்; (Rhizome) எனப்படும். இலைகளுடன் கூடிய தண்டு மிக குறுகிய; இலைகள் ஈட்டி வடிவானது; கரும் பச்சை வண்ணங் கொண்டவை; மடலிலுள்ள மைய நரம்பு தடித்தது; மற்றவை ஒரு போக்காக அமைந்தவை; மலர்கள் மஞ்சரியாக காணப்படுகின்றன.

இதில் இருவகை உண்டு விரலிமஞ்சள் அல்லது கறிமஞ்சள் ஒருவகை, கப்பு மஞ்சள் என இருவகை உண்டு. இருவகை மஞ்சள்களும் ஒரேசெடியில் விளைவது தான். உருண்டை வடிவத் தாய்மட்ட நிலத்தண்டுகள் கப்பு மஞ்சள் என்றும் அதிலிருந்து விரல் வடிவ கிளை மட்ட நிலத்தண்டுகள் கறிமஞ்சள் எனவும் அழைக்கப்படுகின்றது.

முகத்திற்கு பூசும் உருண்டையான மஞ்சள் கப்புமஞ்சள் எனப்படும்.

### பரம்பலும், இனவிருத்தியும்

யாழ் மாவட்டத்தில் சித்த மருத்துவத் துறை, கைதடி விவசாயப் பண்ணை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் பயிரிடப்பட்டுள்ளது. மஞ்சள் செடிகள் சிரமம் இல்லாமல் வீட்டிலேயே வளர்க்கலாம். நல்ல பச்சை நிறத்துடன் கவர்ச்சிகரமாக காட்சியளிக்கும். மட்ட நிலத்தண்டுகள் மூலம் பயிரிட்டு வளர்க்கலாம். பயிரிட்டு பத்து மாதங்களின் பின் நிலக்கீழ்த்தண்டுகளை அறுவடை செய்யலாம்.

### மருவத்துவப் பயன்கள்

• மஞ்சளை இடித்துத் தூள்செய்து மெல்லிய துணியில் வடிகட்டி எடுக்க வேண்டும். இத்தூளைப் புண்கள் மீது தூவுவதால் புண்கள் விரைவில் குணமாகிவிடும்.

• சமைக்கும் பொருளுக்கு நிறம் தருவதற்காக மஞ்சள் சேர்க்கப்படுகின்றது எனப்பலர் கருதுகின்றார்கள். ஆனால் உண்மையில் சமைக்கும் பொருள்கள் எதுவாயினும் அதிலுள்ள நுண்ணிய நச்சுக் கிருமிகளை அழிக்கவே மஞ்சள் தூளைச் சேர்க்கின்றார்கள்.

• பெண்கள் முகத்திற்கும் உடல் முழுவதும் மஞ்சள் பூசி நீராடுவதால் மேனி பளபளப் படைகிறது. வியர்வை நாற்றத்தை நீங்கச் செய்கிறது முகத்தில் முடிவளராமல் தடுக்கின்றது.



• சேற்றில் நடப்பதாலும், அடிக்கடி நீரில் நடப்பதாலும் காலின் விரலிடுக்குகளில் ஏற்படும் சேற்றுப்புண்ணை மஞ்சள் தூள் பூசுவதால் குணப்படுத்தலாம். கடுமையான சேற்றுப்புண் என்றால் மஞ்சள் தூளும் சிறிதளவு சுண்ணாம்பும் கலந்து பூசிவர விரைவில் குணமாகும்.

• அடிபட்ட வீக்கம், இரத்தக்கட்டி ஆகியவற்றுக்கு மஞ்சளையும், கஸ்தூரி மஞ்சளையும் கலந்து சிறிது நீர்விட்டுக் கலந்து கொள்ள வேண்டும். இதைச் சிறிதளவு சூடு படுத்தி இளஞ்சூட்டுடன் பற்றுப் போட வேண்டும். இதனால் வீக்கம் வடிந்து குணமாகும்.

• மஞ்சள்தூள் இரண்டு சிட்டிகை, பனங்கற்கண்டு 15கிராம பசுவின் பால் 150மி.லீ. ஆகிய மூன்றையும் கலந்து காய்ச்சி அருந்தினால் இருமல், புகைச்சல், தொண்டை வலி, தொண்டைக்கட்டு ஆகியவை குணமாகும்.

• பச்சை மஞ்சள் கிழங்கை இடித்துச் சாறு எடுத்து அச்சாற்றை புண்கள், வீக்கம் நச்சுப் புண் ஆகியவற்றின் மேலே பூசினால் அவை விரைவில் குணமாகும்.

• மஞ்சளிலுள்ள Curcumin எனும் இரசாயணப்பொருள் பக்ரீரியாவிற்கு எதிராக செயல்படுகின்றது; தோலில் தடவி வெயிலில் காட்டினால் பக்ரீரியாக்கள் கொல்லப்படுகின்றது.

1987-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சீன ஆய்வுகள் மஞ்சளுக்கு கொலஸ்ரோல் அளவினைக் குறைக்கும் திறன் உள்ளதை உறுதி செய்துள்ளன.

புற்றுநோய்க்கு ஆளாகக்கூடியவர்கட்கு தடுப்பாக (Antioxident) பயன்படும் எனவும் தெரிகிறது.

• மூலநோயில் மலக்குடல் வெளிவருவதால் ஏற்படும் நோயினை போக்க களிம்பு தயாரிக்கப்பயன்படுத்தப்படுகிறது. (இத்துடன் சணல் செடியின் இலை, வெங்காயம் மற்றும் சூடுபடுத்திய ஆளிவிதை, எண்ணெயுடன் மஞ்சள் சேர்த்து தயாரிக்கப்படுகின்றது.)

•மஞ்சள் பசையுடன் எலுமிச்சப்பழச்சாறு சேர்த்து சுளுக்கிற்கு பூசலாம்.

• கைவிரலில் நகச்சுற்று ஏற்பட்டால் சிறிது மஞ்சள் பொடியையும் சுண்ணாம்பையும் கலந்து பற்றுப்போடவும். அல்லது பச்சரிசியை சமைத்து மஞ்சள் பொடி, சுண்ணாம்பும் சேர்த்து அரைத்து பற்றாகவும் போடலாம்.

• மஞ்சளைச் சுட்டுமுகர நீரேற்றம் தீரும்.

• வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து, அம்மைக்கொப்பளங்கள் மீது பூச எளிதில் ஆறிப்போகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

மஞ்சள் நீரில் ஒரு சிறிய வெண் சீலைத் துண்டை நனைத்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு கண்நோய் உள்ளவர்கள் இச்சீலையை கொண்டு கண்களை துடைத்துவரக் கண்சிவப்பு, கண்வலி தீரும்.

• மஞ்சள் சுட்ட சாம்பலைத் தேங்காய் எண்ணெயில் சிறிது நேரம் சூடாக்கித் தடவி வந்தால் தோல் நோய், படை, தேமல் அனைத்தும் குணமாகும்.

• மஞ்சளைச் சுட்டுப் பொடியாக்கி சிறிது தேனில் குழைத்துச் சாப்பிட்டால் தோல் தடிப்பு, ஊறல் நீங்கும்.

• மஞ்சள், பச்சைப்பயறு, கடலைப் பருப்பு ஆகியவற்றை சமமாக எடுத்து அரைத்து பொடியாக்கி குளிக்கும் போது உடலுக்குத் தேய்த்துவரவேண்டும். இதனால் உடல்தோல் மென்மையடையும்.

• மஞ்சள் கிழங்கை நெருப்பில் காய்ச்சித் தேள் கொட்டிய இடத்தில் சூடுவைப்பது, மஞ்சள் புகை பிடிப்பது, மஞ்சளை அரைத்துத்தடவுவது ஆகியவற்றால் தேள்கடி நலமாகும்.

நாம் எதை இழந்து விட்டாலும், கௌரவத்தை இழக்க இடம் தரக் கூடாது.

~ சோக்கிரட்டீஸ்

வலம்புரி

## அமெரிக்க ஜனாதிபதிக்கு ஈராக்கில் நடந்த அவமானம்

உலகின் காவற்காரனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள விரும்பும் அமெரிக்கா தனது நிலையில் இருந்து மாறுகிறதென்பதையே அந்த நாட்டின் வருங்கால ஜனாதிபதியாக ஒபாமா தெரிவு செய்யப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

அதேநேரம் அமெரிக்க ஜனாதிபதியாக இருக்கும் ஜோர்ஜ் புஷ் தனது பதவியிலிருந்து இறங்கும் முன் அமெரிக்க ஜனாதிபதி என்ற உயர் பதவியின் இறுதிக்காலத்தில் பலத்த அவமானத்திற்கு உட்பட்டுள்ளார்.

ஈராக் மீது தாக்குதல் நடத்தி அந்த நாட்டை துவம்சம் செய்த ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ஈராக்கின் அதிபராக இருந்த சதாம் ஹுசைனுக்கு நீதிமன்றத்தின் தீர்ப்பெனக் கூறி மரண தண்டனை வழங்கினார்.

மரண தண்டனை வழங்க வேண்டாம் என பாப்பரசர் வேண்டுகோள் விடுத்திருந்தும் கூட அதனை புஷ் நிராகரித்துவிட்டார்.

ஆனால், கடந்த இரு தினங்களுக்கு முன் ஈராக்கிற்கு விஜயம் செய்த ஜோர்ஜ் புஷ் அங்கு பத்திரிகையாளர் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

அந்த சந்திப்பின்போது அங்கிருந்த ஊடகவியலாளர் ஒருவர் தனது இரண்டு சப்பாத்துக்களையும் கழற்றி ஜோர்ஜ் புஷ் மீது எறிந்தார்.

எறியப்பட்ட சப்பாத்து தன்னில் அடிபட்டுக் கொள்ளாத வகையில் புஷ் குனிந்து எழுந்தார்.

இவ்வாறு அவர் குனிந்து எழுந்ததற்குப் பலவாறாகப் பொருள் கொடுக்க முடியும்.

எதுவாயினும் காலில் கிடந்த சப்பாத்தை எடுத்து எறியும் அளவுக்கு புஷ்ஷின் கௌரவம் கீழ்தளத்திற்கு போய்விட்டதென்பதே உண்மை.

புஷ்ஷினால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சதாம் ஹுசைன் தூக்கு மேடையிலும் கையில் குர்ஆனுடன் தலைநிமிர்ந்து நின்று தன் மண்ணின் பெருமையைக் காக்க, அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஒரு ஈராக்கிய முஸ்லிமின் சப்பாத்துக்கு குனிந்தெழுந்து நமஸ்காரம் போட்டமை அமெரிக்காவுக்குப் பலத்த அவமானமாகும்.

ஈராக்கிய அரச சார்புடைய ஊடகங்கள் சார்ந்தவர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பில் அங்கிருந்த ஊடகவியலாளர் ஒருவர் தன் சப்பாத்தைக் கழற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எறிந்தார் எனின் அமெரிக்காவின் புலனாய்வு-தனது நாட்டு அதிபருக்குக் கொடுத்த பாதுகாப்பு என எல்லாமே ஏளனத்துக்குரியதாகி விட்டது.

இதற்கு மேலாக கூறுவதாயின் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு நடந்த சம்பவத்தை அதி சிறந்த அனுபவப் பாடமாக அரசியல் தலைவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

# இலங்கையைப் பிரிப்பதற்கே ஐ.நாவின் தலையீடு கோரப்படுகிறது

## ஜே.வி.பி கடும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதற்கு முன்னர் அமெரிக்காவில் புஷ் நிர்வாகம் ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களை தடுக்க ஐ.நா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

ஐ. நா உட்பட வெளிநாடுகள் எமது நாட்டுப் பிரச்சினையில் தலையிடும் சூழ்நிலையை அரசாங்கமே ஏற்ப டுத்துக்கின்றது என்று அவர் கூறினார். இலங்கை பிரச்சினையில் ஐ. நா தலையிட வேண்டுமென்ற கோரிக்கைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர்இவ்வாறு கூறினார்.

இத தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது எமது நாட்டில் 17 ஆவது திருத்தம் முன்னெடுக்கப்படவில்லை அதற்கமைய பொலிஸ், தேர்தல், நீதித்துறை போன்ற சுயாதீன ஆணைக் குழுக்கள் நியமிக்கப்படவில்லை.

ஊடகச் சுதந்திரம் அடக்கு முறைக்குள்ளாக்கப்படுகின்றது என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே ஐ. நா வின் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கையின் அங்கத்துவம் பறிபோனது. யுத்தம் இதற்கு காரணமில்லை. எனவே அரசாங்கம் இவைதொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இவ்வாறான தலையீடுகள் தொடரும்.

அதே வேளை ஐ.நா முதலில் ஈராக், ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மேற் கொண்டுள்ள கண் மூடித்தனமான தாக்குதல்கள், மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு முன்னுதாரணத்தை காட்ட வேண்டும்.

இவ்வாறான தலையீடுகளை வேறொன்றுக்குமல்ல செர்பியாவில், கொசோவாவை அமெரிக்க உதவியுடன் பிரித்தது போன்று இலங்கையையும் பிரிப்பதற்காகவே ஐ. நா தலையிட வேண்டுமென்ற கூச்சல் எழுந்துள்ளது. (ச-5)

# சந்தேக நபரை 18 மாதங்கள் தடுத்துவைக்கும் வர்த்தமானி அறிவித்தல் உயர்நீதிமன்றால் ரத்து

(கொழும்பு)

சந்தேக நபர் ஒருவரை அவசர காலச் சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் ஒன்றரை வருடங்கள் பொலிஸ் கட்டுப்பாட்டில் தடுத்து வைப்பதற்கு அனுமதிக்கும் வர்த்தமானி அறிவித்தலை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சந்தேகநபர் ஒருவரை 90 நாட்களுக்கு பொலிஸாரின் கட்டுப் பாட்டில் தடுத்து வைத்து விசாரிப்பதற்கும், அனுமதிப்பதற்கும், விளக்கமறியலில் வைத்திருப்பவரை மீண்டும் பொலிஸாரின் கட்டுப் பாட்டில் கொண்டு வருவதற்கும் சட்டமா அதிபருக்கு அதிகாரங்களைவழங்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தலானது அடிப்படை மனித உரிமையை மீறும் செயலெனக் கூறி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான நீதிபதிகள் குழு நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

அவசர காலச் சட்டம் ஆண்டாண்டு காலமாக ஆட்சிக்கு வந்தவர்களால் மாற்றியமைக்கப்பட்டதாகவும் இறுதியாக 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட்13 ஆம் திகதி மாற்றப்பட்ட புதிய அவசர காலச் சட்ட விதி முறைகளே தற்பொழுது அமுலில் இருப்பதாகவும் மனு தாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அவசரக் காலச் சட்டத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்துக்கமைய கைது செய்யும் ஒருவரை ஒரு வருடத்துக்கு மேலாகத் தடுத்து வைப்பதற்கான அதிகாரங்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்படும் ஒரு சந்தேகநபர் 90 நாட்களின் பின்னர் தடுத்து வைக்கப்படும் இடம் சிறைச்சாலையாகவே இருக்க வேண்டும் எனவும் அதனை விடுத்து அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் பணியாற்றும் பொலிஸ் மா அதிபரோ அல்லது வேறெந்த நபரோ சந்தேக நபரைத் தடுத்து வைக்கும் இடத்தைத் தீர்மானிக்க முடியாது என அந்த மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவசரக் காலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் நபர் ஒருவர் தடுத்து வைக்கப்படும் இடத்தையும் தடுத்து வைக்கப்படும் காலத்தையும் நிறைவேற்று அதிகாரம் தீர்மானிப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியது இல்லையெனஅந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்படும் நபரை பிணையில் விடுதலை செய்வதற்கு நீதிவான நீதிமன்ற நீதிபதி சட்டமா அதிபரின் எழுத்து மூல அறிவித்தலுக்குக் காத்திருக்க வேண்டிய நிலை இருப்பதாகவும் மனுதாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஓ-5)

# இராஜதந்திர உறவுகள் பற்றிய விடயங்களை ஊடகங்களுக்கு வெளியிட முடியாது

## வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம



(கொழும்பு)

ஏனைய நாடுகளுடன் இலங்கை கொண்டிருக்கும் இராஜதந்திர உறவுகள் பற்றிய அனைத்து விடயங்களையும் ஊடகங்களுக்கு அறிவிக்கக்கூடியதாக இருக்காது என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம கூறினார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் வெளிவிவகாரங்களில் பணியாற்றுபவர்கள் வெளியிடும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவர்களே பதில்சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்பதால் வெளியிடும் ஒவ்வொரு வார்த்தை பற்றியும் குறிப்பாக ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் கருத்துக்கள் பற்றி கூடிய அவதானத்துடன் இருக்க வேண்டிய நிலை காணப்படுவதாக அமைச்சர் விளக்கமளித்தார்.

இதனால்தான் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முஹர்ஜியின் இலங்கை விஜயம் பற்றி எந்த விதமான கருத்துக்களையும் தெரிவிப்பதை நான் தவிர்த்து வருகின்றேன். முஹர்ஜி இலங்கை வருவார் என சில ஊடங் களும் வரமாட்டார் என சில ஊடகங்களும் கூறி வருகின்றன என ரோஹித்த போகொல்லாகம சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இந்த நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான தயான் பெரேரா ஒவ்வொரு ஊடகமும் தாம் வெளியிடும் ஒவ்வொரு வார்த்தைக்கும் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு இருப்பதாகக் கூறினார்.

குறிப்பாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்துவதில் பாராளுமன்ற செய்தியாளர்கள் முக்கிய பங்குவகிப்பததாக அவர் சுட்டிக்காட்டினார். (ஓ-5)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி அன்பே பலனைத் தரும்



அன்பு பலனளிக்காமல் போவதில்லை. என்மகனே, இன்றோ நாளையோ யுகாந்தரத்திலோ உண்மை வெல்வது நிச்சயம். அன்பு நிச்சயம் வெல்லும். உனது மனித சகோதரர்களை நேசிக்கிறாயா? கடவுளை எங்கே போய் தேடுகிறாய் நீ? ஏழைகள், துன்புறுபவர்கள்,பலவீனர்கள் அனைவரும் தெய்வங்கள் அல்லவா? அவர்களை ஏன் முதலில் வழிபடக்கூடாது? ஏன் கங்கைக் கரையில் கிணறு தோண்டப் போகிறாய்? அன்பின் எல்லாம் வல்ல ஆற்றலில் நம்பிக்கை கொள். மின்னி மறைகின்ற இந்தப் பெயர் புகழை யார் பொருட்படுத்துகின்றனர். செய்தித்தாள்கள் என்ன கூறுகிறது என்று நான் ஒரு போதும் கவனித்ததில்லை. உன்னிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் நீ எல்லாம் வல்லவன். நீ முற்றிலும் சுய நலம் அற்றவனா? அப்படியானால் உ ன்னை எதனாலும் தடுக்க முடியாது. ஒழுக்கத்தின் வலிமையே எங்கும் வெல்லக் கூடியது. கடலின் நடுவிலும் கூட இறைவனே தன் குழைந்தைகளைப் பாதுகாக்கிறார்.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை – பெரும் புயல் ‘நிஷா’


11

என்.விஜயன்

### வெள்ளத்தின் வேகத்தில் உடைந்து போன காவலரண்கள்

இலங்கையில் எந்த விடயத்திலும் இன, மத, மொழி வேறுபாடுகள் மேலோங்கியிருந்தாலும், வெள்ளத்திடம் மட்டும் அந்த வேறுபாடுகளை அறவே காண முடியவில்லை.


ஆலயங்கள், பாடசாலைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என



எங்கும் மேவிப்பாய்ந்த வெள்ளத்திடம் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவக் காவலரண்களும் சிக்கிக்கொண்டன.

காவலரண்களின் கூரைகளை நிஷா புயல் தட்டிவிட மண் மூடைகளை மழை கரைத்துக்கொடுக்க காவற்சுவர்களை வெள்ளம் தள்ளி வீழ்த்தி தன்னுள் கர்வம் கொண்டது.

இராணுவக்காவலரண்கள் மீது கல்லெறிந்தாலே அதனை முன் பக்கத்தில் முதன்மைப்படுத்தும் பத்திரிகைகள் வெள்ளத்தின் தாக்குதலில் தகர்ந்த காவலரண்கள்



பற்றி எந்தச் செய்தியும் பிரசுரிக்காதது வெள்ளத்திற்கு வெறுப்பை ஏற்படுத்த அதேவேகத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகை நிறுவனம் ஒன்றின் இயந்திர அறைக்குள் புகுந்து, எச்சரிக்கை செய்தது.

கரையோரப்பகுதிகள், நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோவிலடி, மருதடிப்பிள்ளையார் கோவிலடி, பண்ணை வீதி, கந்தரோடை, அளவெட்டி, நாவற்குழி, கைதடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்கள் உடைந்து வீழ்ந்தன. ( இங்கு சில இடங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன)

### ஜீவகாருண்ணியம்

இலங்கையின் வரலாற்றில் என்றும் பதிவிடப்படாத மழை 2008 ஆம் ஆண்டு நவம்பர் 23,24,25, 26,27 ஆகிய திகதிகளில் பெய்துள்ளது.

வானிலை அவதான நிலையத்தின் தகவலின்படி 720 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. அதிகமான மழை வீழ்ச்சியினால் வெள்ளம் வீடுகளுக்குள் நுழைந்து எங்கும் வெள்ளம் எதிலும் வெள்ளம் என்ற அவலத்தை தோற்றுவிக்க, பாரிய மரங்களை மழை பாறி வீழ்த்த மக்கள் மட்டுமல்ல ஆடு, மாடு, கோழி, நாய், பூனை என எல்லாமே அல்லல்பட்டன.

வெள்ளத்தின் பெருக்கத்தினால் வீடுகளை விட்டு வெளியேறி நீண்ட தூரம் சென்று தங்கியவர்களுக்கு தங்கள் வீட்டில் நின்ற நாயும், பூனையும் ஞாபகத்திற்கு வராமல் போனமை வேதனைக்குரிய விடயமே.

ஆனாலும் பலர் தங்கள் வீட்டு வளர்ப்புப்பிராணிகளையும் , கால் நடைகளையும் பாதுகாப்பதிலேயே முதலில் கவனம் செலுத்தினர்.

வாசகர்கள் வழங்கிய படங்கள்





பேபி ஸ்ருடியோ கந்தர்மடம்

சுதுமலை அம்மன் கோவில் பகுதி வெள்ளக்காடாகிய போது அதன் அயலில் உள்ள குகன் குடும்பத்தினர் தங்கள் மாடுகளையும் நாயையும் வீட்டின் பிளாற்றில் ஏற்றி அவற்றுக்கு அபயம் கொடுத்தனர். இது போல தங்கள் வளர்ப்புப்பிராணிகளை மோட்டார் சைக்கிள்களிலும், துவிச்சக்கர வண்டிகளிலும், வாகனங்களிலும் தங்களோடு ஏற்றிச் சென்று அவற்றைப் பாதுகாத்த ஜீவகாருண்ணியம் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டுச் சிறப்பை மீண்டும் ஒரு தடவை ஞாபகப்படுத்துவதாகும்.

### திருடர்களின் கைவரிசை

நிஷா வெள்ளத்தினால் இயல்பு நிலைகள் எல்லாம் பாதிக்கப்பட்டாலும் திருட்டுத் தொழில் மட்டுமே முன்னேற்றம் கண்டது.

ஆம்! வெள்ளத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மக்கள் இடம்பெயர்ந்தவேளை, திருடர் கோஷ்டிகள் தங்கள் தொழிலை தயக்கமின்றி மேற்கொண்டன.

நல்லூர் பகுதியிலுள்ள வீடொன்றில் நுழைந்த திருட்டுக் கோஷ்டி வீட்டிலிருந்த கணனி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி என்பவற்றை எடுத்துச் சென்றது. இது போல பல சம்பவங்களைக் கூறிக் கொள்ளலாம்.

என்னதான் இயற்கை அழிவு ஏற்பட்டாலும் திருடர்கள் தங்கள் தொழிலுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் பார்த்துக் கொள்வது ஆச்சரியமான உண்மை.

இத்தகைய சம்பவங்கள் சர்வ சாதாரணமாக யாழ்ப்பாணத்தில் நடந்தேறுகின்றது.

கடந்த காலங்களிலும் யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களின் போது திருடர்கள் தங்கள் கைவரிசையை காட்டியிருந்தனர்.

நிஷா இயற்கை அனர்த்தத்திலும் திருடர்கள் தங்கள் செய்தொழிலை தவறவிடவில்லை.

இவையெல்லாம் நிஷா வெள்ளத்தோடு நடந்து முடிந்தவை. ஆனால் இன்னுமோர் சம்பவம் நிஷாவைச் சாட்டி தொடர்வதாக பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆம்! நிஷாவுக்குப் பின்னர் கேட்டுக் கேள்வியின்றி மரங்கள் தறிக்கப்படுவதே அந்தச் சம்பவமாகும்.

‘வந்தவெள்ளம் இருந்த வெள்ளத்தையும் கொண்டு போனது’ என்றொரு பழமொழி தமிழில் உண்டு.

அந்தப் பழமொழி நிஷா புயலுக்குப் பின்னர் சாலப் பொருத்துடையதாக அமைகிறது.

அதாவது நிஷா புயல் வீழ்த்திப் போன மரங்களைக் காட்டிலும் அதனைச் சாட்டாகக் கொண்டு தறித்த மரங்களே! அதிகம் எனலாம்.

இந்த நிலை தொடருமாக இருந்தால் யாழ்ப்பாணம் பாலைவனப் பகுதியாகத் தன்னையாக்கிக் கொள்ளும்.

(வளரும்)



# எனது கிரிக்கெட் வாழ்விலே பெற்ற சிறந்த சதத்தை மும்பையில் பாதித்தவர்களுக்கு அர்ப்பணிக்கிறேன்

## டெண்டுல்கர் உருக்கம்

(சென்னை)

எனது கிரிக்கெட் வரலாற்றிலேயே நேற்று முன்தினம் பெற்ற சதம்தான் சிறந்தது. இந்த சதத்தை மும்பை தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அர்ப்பணிக்கிறேன் என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

சென்னை டெஸ்ட் போட்டியில் சதம் அடித்து இந்திய வெற்றிக்குக் காரணமாக இருந்த சச்சின் டெண்டுல்கர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் எனது கிரிக்கெட் வரலாற்றிலேயே இந்த சதம் தான் சிறந்தது.

நான் சதம் அடித்ததும் இந்த டெஸ்ட் போட்டியில் 387 ஓட்டங்களை நான்காவது இன்னிங்ஸில் பதில் எடுத்தாடியதும் இந்தியா வெற்றி பெற்றிருப்பதும் மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்த வெற்றியை இனிவரும் போட்டிகளிலும் தொடரவேண்டும். மும்பைத்தாக்குதல் சம்பவம் துரதிர்ஷ்ட வசமானது. இந்தியா வெற்றிபெற்றதாலும் நான் சதம் அடித்ததாலும் மும்பை சம்பவத் தில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆறுதல் கிடைத் திருக்காது. மீண்டும் இந்தியா வந்து டெஸ்ட் போட்டியில் விளையாடிய இங்கிலாந்துக்கு நன்றி.

என்னைப் பொறுத்தவரை மும்பை சம்பவம் இந்தியாவின் மீதான தாக்குதல். மும்பை சம்பவம் ஒவ்வொரு இந்தியனையும் பாதித்திருக்கிறது.

இந்த சதத்தை மும்பை தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அர்ப்பணிக்கிறேன். இந்த ஆடுகளத்தில் ஒருநாளில் மூன்று பகுதிகளிலும் ஆட்டமிழக்காமல் விளையாடுவது கடினம். தேவையான அளவு ரிஸ்க் எடுத்து விளையாடினால் இந்த ஆடுகளத்தில் ஓட்டம் குவிக்க முடியும். இங்கு நான்காவது இன்னிங்ஸில் அதிகபட்சமாக 387 ஓட்டங்களை குவித்து டெஸ்ட் போட்டியை வென்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

யுவராஜ் சிங் சிறப்பாக விளையாடி அவர் நல்ல டெஸ்ட் துடுப்பாட்டவீரர் இல்லை என்ற வாதத்தை தவறாக்கியிருக்கிறார்.

இங்கிலாந்து வீரர்கள் சிறப்பாகவே பந்து வீசினர். ஆனால் நாங்கள் அவர்களை விட சிறப்பாக துடுப்பாட்டம் செய்தோம். இங்கிலாந்து அணியில் ஸ்ரொரஸ், கொலிங்வூட், முதல் இன்னிங்ஸில் பிறிரும் சிறப்பாகத் துடுப்பாட்டம் செய்தனர்.

சேவாக் எப்போதும் அதிரடியாக விளையாடிவருவதால் அவரது ஆட்டம் எங்களுக்கு பழகிப்போய்விட்டது. அவரைப்போல் அதிரடியாக மிகச் சிலராலேயே விளையாட முடியும்.

எதிரணியில் புதிய சுழற்பந்து வீச்சாளர்கள் இந்தியாவிற்கு சவால் என நினைக்க வில்லை. டிராவிட் சிறந்தவீரர். அவர் மீண்டும் ஓட்டங்களை குவிப்பார். இவ்வாறு சச்சின் கூறினார்.

# ஆஸி–தென்னாபிரிக்கா டெஸ்ட் இன்று ஆரம்பம்

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள சிமித் தலைமையிலான தென்னாபிரிக்கா அணி மூன்று டெஸ்ட், இரண்டு இருபது–20 மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

முதல் டெஸ்ட் பேர்த்தில் இன்று ஆரம்பமாகிறது. இவ்விரு அணிகள் இதுவரை 77 முறை டெஸ்ட் போட்டியில் மோதியுள்ளன. இதில் அவுஸ்திரேலியா 44, தென்னாபிரிக்கா15 முறை வெற்றி பெற்றுள்ளன. 18போட்டிகள் சமனிலையில் முடிந்தன.

அவுஸ்திரேலிய மண்ணில் இதுவரை மோதிய 32 டெஸ்டில் அவுஸ்திரேலியா 19, தென்னாபிரிக்கா 5 முறை வென்றுள்ளன.

8 போட்டிகள் சமனிலையாக டெஸ்ட் தரவரிசையில் இரண்டாவது இடத்தை தக்கவைத்துக்கொள்ளவும் முதன்முறையாக அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரை கைப்பற்றவும் தென்ஆபிரிக்கா தயாராகி வருகிறது.

சொந்த மண்ணில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரை வெல்ல அவுஸ்திரேலிய வீரர்கள் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இரு அணிகளும் வெற்றியை நோக்கி களமிறங்குவதால் போட்டியின் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.

# சேவாக், காம்பீர், லக்ஸ்மன், ஹர்பஜன் தரம் உயர்வு; இந்திய கிரிக்கெட் அணிக்கு 37 வீரர்கள் ஒப்பந்தம்

இந்திய கிரிக்கெட் அணிக்கு 37 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். சேவாக், காம்பீர், லக்ஸ்மன், ஹர்பஜன் சிங் ஆகியோர் ஏ பிரிவுக்கு தரம் உ யர்த்தப்பட்டுள்ளனர்.

### 37வீரர்கள் ஒப்பந்தம்

இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் ஏ, பி,சி, டி என 4 பிரிவுகளாக தரம் பிரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு வருகிறார்கள். இதில் ஆண்டுக்கு ஏ பிரிவில் இடம் பிடிப்பவர்களுக்கு ரூபா. 60 இலட்சமும், பி பிரிவினருக்கும் ரூபா. 40 இலட்சமும், சி பிரிவினருக்கு ரூபா.25 இலட்சமும், டி பிரிவினருக்கு ரூபா. 15 இலட்சமும் ஊதியமாக கிடைக்கும். இது தவிர போட்டிக் கட்டணம் உள்ளிட்ட சலுகைகளும் உண்டு.

2008/2009ஆம் ஆண்டுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட வீரர்கள் பட்டியலை இந்திய கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது. மொத்தம் 37 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக் கிறார்கள். இந்த ஒப்பந்தம் 2008 ஒக்டோபர் முதல் 2009 செப்டம்பர் கடைசிவரை அமுலில் இருக்கும்.

### இஷாந்த் முன்னேற்றம்

ஏ பிரிவில் ஏற்கனவே இடம் பெற்று இருந்த டிராவிட், டெண்டுல்கர், தோனி, சகீர்கான், யுவராஜ் சிங் ஆகியோருடன் பி பிரிவில் இருந்த சேவாக், காம்பீர், ஹர்பஜன் சிங், லக்ஸ்மன் ஆகியோர் சேர்க்கப்பட்டுள் ளனர்.

டி பிரிவில் இருந்த இஷாந்த் சர்மா, பத்ரிநாத், ரோகித்சர்மா ஆகியோர் பி பிரிவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளனர். மற்றும் ஆர். பி.சிங், முனாப் பட்டேல், சுரேஷ் ரெய்னா, இர்பான் பதான் ஆகியோர் பி பிரிவில் இடம் பெற்றுள்ளனர்.

சி பிரிவில் பியூஷ் சாவ்லா, வாசிம் ஜாபர், யூசுப் பதான், பிரவீன்குமார், ஓஜா, அமித் மிஷ்ரா, சிறிசாந்த் ஆகியோரும் டி பிரிவில் தினேஷ் கார்த்திக், ரொபின் உத்தப்பா, பார்த்தீவ் ப ட்டேல், மன்பிரீத் கோனி, புஜரா, கைப், விராட் கோக்லி, திண்டா, சாஹா, நந்தா , எம்.விஜய், அஸ்வின், ஷிகர் ,தவான், சுதீப்தியாகி ஆகியோரும் இடம்பிடித் துள்ளனர்.

# முன்னேறும் இலங்கை...

தின் மீதான தடையை அகற்றி எங்களுடைய விடுதலை போராட்டத்தை அங்கீகரிக் கவேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள்.

**இந்தியாவிற்கு சிங்கள தேசம் நண்பர்களாக இருக்க முடியுமா?**

ஒரு போதும் இருக்கமுடியாது. வரலாற்று ரீதியாக உண்மையான நண்பர்கள் நாங்கள்தான் என்பதை நான் பலமுறை சுட்டிக்காட்டி யிருக்கிறேன். வரலாறும் அதைத்தான் எடுத்துக்காட்டுகின்றது. இன்று நேற்றல்ல பல ஆயிரம் வருடங்களாக இந்தியாவின் வரலாற்று நண்பர்கள் தமிழ்மக்கள் தான் என்பது இந்தியாவுக்கு நன்றாக தெரியும்.

**போர் நிறுத்தம் என்ற செய்திகள் தற்போது பரவலாக வந்து கொண்டிருக் கின்றன. அத்தகைய போர் நிறுத்த அழைப்பு வந்தால் புலிகள் அதனை சாதகமாக ஏற்றுக்கொள்வார்களா?**

போர் நிறுத்தம் குறித்து நாங்கள் அனைத்துலக சமூகத்திற்கும் தமிழ் மக்களுக்கும் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றோம். நோர்வேயின் அனுசரணையுடன் செய்யப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை அரசு தான் விலகிக்கொண்டது. நாங்கள் விலகிக்கொள்ள வில்லை. சிங்கள அரசு அரசியல் தீர்வை விரும்பாது இராணுவத்தீர்வின் மூலமே தான் நினைத்ததனை அடைய முனைகின்றது என்பது அனைத்துலக சமூகத்திற்கு இன்று நன்றாகத் தெரிகிறது. உலகின் எந்தவொரு தேசியப் பிரச்சினையும் இராணுவ அடக்கு முறையினுடாக தீர்த்துவைக்கப்பட்டதென்பது உலக வரலாற்றில் இல்லை. அதை உலகநாடுகள் புரிந்துகொள்ளும்.

(ச–5)

# சென்னை டெஸ்ட் துளிகள்

- இங்கிலாந்து அணி வீரர் ஸ்ரொரஸ் இரண்டு இன்னிங்கிலும் சதம் அடித்தும் இங்கிலாந்து அணி தோல்வியை தழுவியது. ஒரு அணி வீரர் இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்தும் அந்த அணி தோல்வியை சந்திப்பது இது 8ஆவது முறையாகும். இந்திய அணிக்கு எதிராக ஒரு அணி இது போல தோற்றது இதுவே முதல் முறையாகும். ஸ்ரொரஸ் சதம் அடித்த போட்டியில் இங்கிலாந்து அணி தோல்வி சந்தித்தது இது முதல் தடவையாகும்.
- டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 3ஆவது இன்னிங்சை இடை நிறுத்திய இங்கிலாந்து அணி தோல்வியை சந்தித்தது 11ஆவது சம்பவமாகும் ஆனால் இந்திய துணை கண்டத்தில் இது போன்ற தோல்வி ஒரு அணிக்கு கிடைத்தது முதல் முற்றயாகும்.
- சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த 30 டெஸ்ட் போட்டிகளில் ஒரு டெஸ்டில் இரு அணிகளும் சேர்ந்து 1000 ஓட்டங்களுக்கு மேல் (1255 ஓட்டங்கள்) எடுப்பது இது 13ஆவது தடவையாகும். அதிக பட்சமாக இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இங்கு நடந்த இந்தியா –தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் அதிகபட்சமாக 1498 ஓட்டங்கள் குவிக்கப்பட்டது.

இந்தியா இங்கிலாந்து அணிகள் இங்கு 3ஆவது முறையாக 1000 ஓட்டங்களுக்கு மேல் (1255) குவித்துள்ளன. இதற்கு முன்பு 1984–85–ஆம் ஆண்டில் 1371ஓட்டங்களும் 1992–93 ஆண்டில் 1098 ஓட்டங்களும் எடுத்துள்ளது.

- டிராவிட் தொடர்ந்து 4ஆவது இன்னிங்ஸில் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டம் இழந்துள்ளார். இந்த ஆண்டில் அவர் மொத்தம் 669 ஓட்டங்களே எடுத்துள்ளார். சராசரியாக 27. 87 ஆகும். டிராவிட் தனது கிரிக்கெட் வரலாற்றில் குறைவாக ஓட்டங்களை எடுத்து இருப்பது இந்த ஆண்டு தான் என்பது குறிப்பிடத்தக்கது.
- டெண்ல்டுல்கர், லட்ஸ்சுமன் ஜோடி 12 ஓட்டங்கள் எடுத்தபோது 4ஆவது விக்கெட்டுக்கு இருவரும் இணைந்து 1000 ஓட்டங்களை (16 இன்னிங்ஸில்)கடந்தது. 4ஆவது விக்கெட்டுக்கு 1000 ஓட்டங்களை கடந்த 4வது இந்திய ஜோடி, சர்வதேச அளவில் 21 ஆவது இணை என்ற அந்தஸ்தை பெற்றது. 4ஆவது விக்கெட்டுக்கு டெண்டுல்கர் கங்குலி இணை 44இன்னிங்ஸில் விளையாடி 2695 ஓட்டங்களை எடுத்துது தான் அதிகமாகும்.
- டெண்டுல்கர் நேற்று முன்தினம் 56 ஓட்டங்களை எட்டிய போது இந்த ஆண்டில் டெஸ்டில் 1000 ஓட்டங்களை கடந்த வீரர் என்ற பெருமையை பெற்றார். ஒரு ஆண்டில் அவர் ஆயிரம் ஓட்டங்களை கடப்பது இது 5ஆவது முறையாகும். இதேபோல் லாரா (மேற்கிந்தியதீவுகள்) ஹைடன் (அவுஸ்திரேலியர்) ஆகியோர் 5 முறை ஆயிரம் ஓட்டங்களை குவித்து இருக்கிறார்கள்.
- 155டெஸ்டில் ஆடியுள்ள டெண்டுல்கர் நேற்றுமுன்தினம் 41ஆவது சதம் அடித்தார். இங்கிலாந்துக்கு எதிராக அவர் அடித்த 6ஆவது சதம் இதுவாகும். சேப்பாக்கம் மைதானத்தில் அவர் பதிவு செய்த 5ஆவது டெஸ்ட் சதமாகும்.
- சேப்பாக்கம் மைதானத்தை சாதனை களம் என்று வர்ணிக்கலாம். நேற்று முன்தினம் இந்திய அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 4ஆவது பெரிய பதிலாட்டம் ஆகும். அத்தோடுஇந்திய மண்ணில் அதிகபட்ச பதிலாட்டம் ஆகும். இதற்கு முன்பு இந்த ஆண்டில் மார்ச் மாதத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் சேவாக் 319 ஓட்டங்களை குவித்து சாதனை புரிந்தார் அதுதான் இந்த மைதானத்தில் தனி நபரின் அதிகபட்ச ஓட்டஎண்ணிக்கையாகும். 1983–84ஆம் ஆண்டில் கவாஸ்கர் தனது 30ஆவது சதத்தை இங்கு பதித்தார். 1988ஆம் ஆண்டில் மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான அறிமுக டெஸ்டில் ஹிர்வானி 16 விக்கெட்டுகள் வீழ்ச்சி சாதனை புரிந்ததும் இங்கு தான். 1986–ஆம் ஆண்டில் சமநிலையில் முடிந்த இந்தியா–அவுஸ்திரேலியா டெஸ்ட் அரங்கேறியதும் இங்குதான். 1997– ஆம் ஆண்டில் சுதந்திர தின கோப்பை ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் வீரர் அன்வர் இந்தியாவுக்கு எதிராக 194 ஓட்டங்கள் குவித்து சாதனை புரிந்தும் இங்குதான்.
- 1999 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக இங்கு நடந்த டெஸ்டில் டெண்டுல்கர் சதம் அடித்து ஆட்டம் இழந்ததும் இந்திய அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றது. அந்த காயத்துக்கு டெண்டுல்கர் நேற்று முன்தினம் மருந்து போட்டுக் கொண்டது போல் இருந்தது.
- டெஸ்ட் போட்டியில் தோனி தலைமையில் இந்திய அணி 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்த 4 டெஸ்ட போட்டிகளிலும் வெற்றிபெற்றும் உள்ளது இதன் மூலம் முதல் 4 டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் என்ற சாதனையை பெற்றார்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான கான்பூர் டெஸ்டிலும், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நாக்பூர், மொகாலி டெஸ்டிலும் இங்கிலாந்துக்கு எதிரான சென்னை டெஸ்டிலும் வெற்றி கிடைத்தது.

(5)

## கூட்டமைப்பு...

இவர்கள் மீது கடந்த மாதம் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், எஸ்.கஜேந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகிய நால்வருக்கும் எதிராகவே குற்றப்புலனாய்வுப் பொலிஸார் குறித்த மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

எனினும் மனுத்தாக்கல் செய்தமைக்கான காரணங்கள் போதியதாக இல்லை என தெரிவித்து வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.அத்துடன் கடவுச்சீட்டு மற்றும் குறித்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேறு ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென குற்றப்புலனாய்வுத்துறையினரின் வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இந்தியா உட்பட வெளிநாடுகளுக்கு செல்வதனை தடை செய்யுமாறு விடுத்த வேண்டுகோளும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த வழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சட்டத் தரணி கௌரி தவராஜா முன்னிலையாகியிருந்தார்.

## கருணாநிதி...

அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக முதல்வர் கருணாநிதியின் தலைமையில் கூடிய கட்சியின் உயர்குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. இந்தக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய கருணாநிதி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரும், மத்திய கப்பல் துறை அமைச்சருமான டி.ஆர்.பாலு நேற்று இரவு தமது கட்சியின் கோரிக்கையை பிரணாப் முகர்ஜியை சந்தித்து முன்வைக்கப் போவதாக குறிப்பிட்டுள்ளார்.

கருணாநிதி தலைமையிலான தமிழகத்தின் அனைத்துக்கட்சிக் குழுவினர் கடந்த 4 ஆம் திகதி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தபோது பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புவதற்கு இணக்கம் காணப்பட்டமையையும் கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## கிளி.நோக்கி 4 முனைகளில்...

நேற்று அதிகாலை 5 மணியளவில் படையினர் முன் நகர்வுகளை மேற்கொண்டனர்.

செறிவான பல்குழல் வெடிகணை,ஆட்லெறி எறிகணை மற்றும் கவசரக போர்க் கலங்களின் சூட்டாதரவுடன் முன் நகர்வுகளை மேற்கொண்ட படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர எதிர்த் தாக்குதலை நடத்தி முன் நகர்வுகளை முறியடித்தனர். இதில் 100க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். 250க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

படையினரின் 10 உடலங்கள் உட்பட பெருமளவிலான படையப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு நகரின் தென் மேற்கு கிராமமான முள்ளியவளையை படைத்தரப்பு விரைவில் கைப்பற்றும் என்று ஆங்கில நாளேடான டெய்லி நியூஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக டெய்லி நியூஸ் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முள்ளியவளை கிராமத்துக்கு தென் மேற்கில் ஒட்டுசுட்டான் -முல்லைத்தீவு வீதியான ஏ-34 இல் சில கிலோ மீற்றர் தொலைவை 59-வது படையணி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.

புலிகளின் நிர்வாக தலைநகரான கிளிநொச்சி பகுதியில் புலிகள் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு புறநகர்ப் பகுதிகளை படைத்தரப்பு நெருங்கி வருகிறது.

தற்போது எது முதன்மையானது என்பது பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டிய நிலையில் புலிகள் உள்ளனர் என்று படைத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லைத்தீவு நகரின் தென்மேற்குப் பகுதியான முள்ளியவளையை விரைவில் படைத்தரப்பு கைப்பற்றும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கிளாலியில் 7 மணிநேரம்...

கிளாலி களமுனையில் கொமாண்டோப் படைகள் மேற்கொண்ட பெருமெடுப்பிலான முன்நகர்வு தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் 40 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 100க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். படையினரின் 8 உடல்கள் உட்பட படையப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது, கிளாலிப் பகுதியில் நேற்று அதிகாலை 2.30 மணிக்கு தரைப்படையின் 53-வது டிவிசன் கொமாண்டோக்களின் எயார் மொபைல் பிரிகேட் கொமாண்டோ படையினர் பெரும் முன் நகர்வினை மேற்கொண்டனர்.

பெருமெடுப்பில் செறிவான பல்குழல் வெடிகணைகள், ஆட்டிலறிப் பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் களப் பீரங்கிகளின் நேரடிச் சூட்டாதரவுடன் படையினர் முன் நகர்வினை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் முன்னரண் பகுதி நோக்கிய படையினரின் தாக்குதலுக்கு எதிராக விடுதலைப் புலிகள் காலை 9.30 மணிவரை முறியடிப்புத் தாக்குதலை தீவிரமாக நடத்தி படையினரின் நடவடிக்கையினை முறியடித்தனர்.

இதில் 40 படையினர் கொல்லப்பட்டனர் 100க்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர்.

படையினரின் 8 உடல்கள் உட்பட பெருமளவிலான படையப் பொருட்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் தாக்குதலில் படைத்தரப்பைச் சேர்ந்த 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 10 பேர் காணாமல் போயுள்ளனர். 160 பேர் காயமடைந்துள்ளனர் என படைத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளாலிப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரண்களை நோக்கி படையினர் நேற்று அதிகாலை 2 மணிக்கு மேற்கொண்ட முன் நகர்வினை விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 9.30 மணிவரையான 7.30 மணி நேர தீவிர எதிர்த் தாக்குதல் மூலம் முறியடித்தனர்.

இதில் தமது தரப்பில் 25 படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 10 பேரைக் காணவில்லை என்றும் 160 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் மற்றும் தென் பகுதியிலுள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் படைத்துறைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## வன்னிக்கான உணவு...

இந்த வீதி தற்காலிகமாக மூடப்பட்டிருப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னதாக கிளிநொச்சி மற்றும் மாங்குளத்தை நோக்கிய படை நடவடிக்கைகள் காரணமாக ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி நோக்கிய போக்குவரத்து தடைப்பட்டது.

இதனை அடுத்து ஓமந்தைக்கும், மாங்குளத்துக்கும் இடையே ஓமந்தைக்கு வடக்காக புளியம்குளம் சந்தியில் இருந்து நெடுங்கேணி வீதியூடாக, ஒட்டுசுட்டான் வழியே உணவுப் பொருட்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

இப்போது இந்த வீதியூடான போக்குவரத்தும் படை நடவடிக்கைகள் காரணமாக தடைப்பட்டுள்ளது. இந்த வீதியூடாக போக்குவரத்தை தவிர்க்குமாறு இராணுவத்தினர் தமக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்திருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த வீதியூடாக உணவுப் பொருட்கள் விநியோகத்திற்கு தடையேதும் கிடையாது என்று இராணுவத்தினர் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும் மோதல்கள் நடை பெறும் பகுதியூடாக உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்வது சாத்தியமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

வவுனியா ஓமந்தை முதல் புளியம்குளம், மாங்குளம் ஊடாக திருமுறிகண்டி வரையிலான ஏ-9 வீதி தற்போது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், மாங்குளம்-முல்லைத்தீவு வீதியில் ஒலுமடு வரையிலான பகுதியும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருப்பதுடன் இந்த வீதியூடாக முல்லைத்தீவை நோக்கி படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு எஞ்சியிருந்த ஒரேயொரு போக்குவரத்துப் பாதையான புளியம்குளம் -நெடுங்கேணி வீதியும் தடைப்படுமானால் இந்த மாவட்டங்களுக்கான சகல போக்குவரத்துக்களும் முற்றாக துண்டிக்கப்பட்டு விடும்.

இதன் காரணமாக உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் வன்னிக்கு உணவுப் பொருட்களை எடுத்துச்செல்லும் நடவடிக்கைகள் தடைப்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-5)

## டெங்கு...

நடவடிக்கைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.இது தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் பணிப்புரைகள் வழாங்கப்பட்டுள்ளன.

தத்தமது வீட்டுத் தோட்டங்களை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நோயைத் தடுக்கும் திட்டத்துக்கு பொதுமக்கள் உதவ வேண்டும்.டெங்கு காய்ச்சல் காரணமாக இதுவரை 22 பேர் இறந்துள்ளனர்.டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கவென வைத்திய சாலைகளில் மேலதிக வசதிகள் செய்யப்பட்டுள்ளன.டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டவர்கள் உடனடியாக வைத்தியர்களிடம் சென்று மருத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபாகரனை கைது செய்ய...

தெரிவித்துள்ளார்.

கனடாவில் ரொரண்டோ நகரின் கிழக்கு பகுதியில் தொடர் மாடியொன்றில் வசித்துவரும் திருமதி விநோதினி ராஜேந்திரன் நஷனல் போஸ்டிற்கு தனது வாழ்க்கை குறிப்பை தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஒரு மனிதன் உருவாவது கடவுளின் விருப்பம். எமது தந்தை இரக்க குணமுள்ளவர். மென்மையாக கதைப்பவர். எனது சகோதரன் அதிகம் புத்தகம் வாசிப்பார்.

வீடு நிறைய புத்தகங்கள் காணப்படும். சிறு குழந்தையாக இருக்கும் போது அவருடன் நான் விளையாடினேன். சண்டை பிடித்தேன். அவர் சாதாரண சிறுவன் போல் தான் அப்போது காணப்பட்டார் என குடும்பத்தில் மூன்றாவதாக பிறந்த விநோதினி தெரிவித்தார்.

விநோதினி தனது கணவருடன் கனடாவிற்கு புலம் பெயர்ந்த பின் கிளிநொச்சியிலுள்ள பெற்றோருடன் தொடர்புகள் இருந்தன.

எனினும் தனது இளைய சகோதரரான பிரபாகரனுடன் தொடர்புகள் இருக்கவில்லை. அவர் தொடர்பான செய்திகள் அறிவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழர்களின் சுதந்திரத்திற்கான போரிலிருந்து பிரபாகரன் விலகமாட்டார் என தான் நம்புவதாகவும் அவர் எதனையும் ஆரம்பித்தால் முடிக்காது விடமாட்டார். எமது அப்பாவும் அப்படித்தான் என வேலுப்பிள்ளை பிரபாகரனின் சகோதரி திருமதி விநோதினி ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். (ச-5)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses...
* Dip In Computerized Accounting
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D
International Courses...
*MCP *MCSE *MCTS,*CIW
*CISCO *A+ *N+,SUN JAVA
*ComTIA SECURITY+, HP, Adobe
Degree Course * BIT Semester 1,3 & 5

## இன்றும்,நாளையும் பதிவுசெய்வோருக்கு கற்கை கட்டண சலுகை

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
www.mcsitacademy.com
MCS Supported By UNDP/JRRP

Microsoft Certified
Systems Engineer MCP - MCSE
★ 100% செய்முறைகளுடன் கூடிய நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ கணனித்துறையில் வேலை செய்வோருக்கு சர்வதேசதகுதி
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
★ ComTIA A+ (Hardware Technician-AUSTRALIA) கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 19.12.2008 12.00PM
Become an Engineer
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP


## மரண அறிவித்தல்

### திருமதி சரோஜனாதேவி வேலாயுதம்



முதலாம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜனாதேவி வேலாயுதம் 15.12.2008 (திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி செல்லாச்சி ஆகியோரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சித்தவைத்திய கலாநிதி சின்னத்தம்பி அசுபதி ஆகியோரின் அன்பு மருமகளும்,மதிவதனி (கனடா), மோகன்பாரதி (இலண்டன்),இளங்கோமாறன் (இலண்டன்), மேனகா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் பானு (கனடா), தமிழ்ச்செல்வி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தாரணி, கஸ்தூரி, சௌமியா, நீரஜா, அட்ஷயன், ஆகர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18.12.2008 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மகிந்த மலர்ச்சாலையில் இருந்து கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பானெஸ் அவெனியூ,
கல்கிசை.
T.P 060 2172542

தகவல்:
கோ.சி.வேலாயுதம் (கணவர்)
(இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்) (இ)


இளைஞர்களே யுவதிகளே!
"உங்களிற்கான உடனடி வேலைவாய்ப்பு"
சம்பளம் -15,000/=
உங்களது சுயவிபரக் கோவையை க.பொ.த. சா/தரச் சான்றிதழுடன் இணைத்து கீழுள்ள முகவரிக்கு 31.12.2008 ற்கு முன் அனுப்பி வையுங்கள்.
தகுதியுள்ளவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.
விளம்பர இல. 2005
மே/பா வலம்புரி,
இல. 03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(2005)

ST.JOHN'S COLLEGE, JAFFNA
VACANCIES FOR TEACHERS
Applications are invited from suitable applicants to teach English Medium Economics & Mathematics for A/L classes and Science for O/L classes. The last date for receiving applications is 31st December 2008. Sports & IT skills will be an advantage. Apply with full bio-data and photocopies of Certificates - Diploma / Degree to:
The Principal,
St.John's College,
Jaffna.
(C-1852)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.